Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | கார்த்திகை-21 | 06-12-2004 | திங்கட்கிழமை | ஓசை -292

கணேசா நகைமாளிகை
தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்
இல:123, பஜார் வீதி, வவுனியா. T.P.-024-2222464
இல:194, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.-021-2225987
(சி-10932)


## திறமை மிக்க படை வீரர் மட்டுமின்றி பிரபாகரன் ஒரு தேசிய சிற்பி

### - அமெரிக்க முன்னாள் சட்டமா அதிபர்



(அலுவலக செய்தியாளர்)

"பிரபாகரன் ஒரு திறமைமிக்க படைவீரர் மட்டுமன்றி தேசிய சிற்பி" இவ்வாறு அமெரிக்க குடியரசின் முன்னாள் சட்டமா அதிபர் ராம்சி கிளார்க் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் சிறுபடை அமைப்பு, கட்டுப்பாட்டுடன் கூடிய ஒழுங்கமைப்பு, சொந்தவாழ்க்கை அர்ப்பணிப்பு, நாசகாரப்படை எதிர்கொள்ளல், அபாயகரமான கட்டங்களிலும் நிலைத்து நிற்கும் வல்லமை-அத்துடன் தன்மக்களை நிலைப்படுத்தியமை-சிறுபான்மை இனத்தவரின் உரிமைக்கும், கௌரவத்திற்கும் குரல்கொடுத்தமை. இதுபோன்று இளம் பிராயத்தில் இருந்தே போராடத்தொடங்கிய வேறு தலைவர்கள் எவராவது கடந்த நூற்றாண்டில் இருக்கிறார்களா? எனவும் அவர் வியந்துள்ளார்.

ஐக்கிய அமெரிக்காவிலுள்ள உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு வெளியிட்டுள்ள தேசியத் தலைவரின் 50ஆவது அகவையின் சிறப்பு மலருக்கு வழங்கிய வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இவ்வாழ்த்துச் செய்தியில் மனித சமுதாயதிற்கும் அதன் பூரணத்துவத்திற்கும் மாபெரும் அச்சுறுத்தலாக இருப்பது அதன் சமகாலத்தில் உலகெங்கும் நடைபெறும் ஒன்றிணைக்கப்பட்ட அனுபவங்களால் உருவாக்கப்பட்ட பாரிய கலாச்சார அழிவுகளும் அதன் கொடுப்பனவுகளும் பல ஆயிரம் வருடங்களாக உருவான கோடிக்கணக்கான மக்களின் அறிவும் அறிவீனமுமேயாகும். (12ஆம் பக்கம் பார்க்க)

# ஜே.வி.பியால் சந்திரிகாவிற்கு தொடர் தொல்லை; நோர்வேயைக் குழப்பியுள்ள ஜே.வி.பியின் கடிதம்!

## சமரசம் செய்ய சந்திரிகா தீவிரமுயற்சி

(கொழும்பு)

**ஜே.வி.பி யின் நடவடிக்கைகள் சனாதிபதிக்குத் தொடர்ந்தும் தொல்லை அளித்து வருவதினால் அவர் பெரும் குழப்பத்திற்கும் சீற்றத்திற்கும் உள்ளாகியுள்ளார். இதேவேளை நோர்வே மீது, குற்றம் சாட்டி ஜே.வி.பி யின் செயலாளர் ரில்வின் சில்வா அனுப்பியுள்ள கடிதத்தினால் குழப்பமடைந்துள்ள நோர்வே அரசு அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்துத் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது. இதேவேளை நோர்வே தொடர்ந்தும் சமாதான முயற்சியைத் தொடர வேண்டுமென சனாதிபதி சந்திரிகா கேட்டுக்கொண்டுள்ளார். நோர்வே நாடு தொடர்ந்தும் இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வில் ஏற்பாட்டாளர் நிலையை வகிக்க வேண்டுமென அரசாங்கம் கேட்டுள்ளது.**

அண்மையில் ஜே.வி.பி நோர்வேயின் ஏற்பாட்டாளர் நிலையை விமர்சித்து எழுதிய கடிதம் ஒன்றில் அரசாங்கம் நோர்வே தரப்பு மீது வைத்திருந்த முழு நம்பிக்கையையும் இழந்துள்ளதாக தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் சனாதிபதியின் உத்தரவின் பேரில் வெளிநாட்டமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் இது தொடர்பாக நோர்வேயுடன் தொடர்பு கொண்டு நிலையை விளக்கியுள்ளார். ஜே.வி.பி யின் கடிதத்தில் அரசாங்கம் தமது நம்பிக்கையை இழந்துள்ளதாக தெரிவித்துள்ளமை தொடர்பாக அவர் குறிப்பிடுகையில்; ஜே.வி.பி. யானது, அரசாங்கத்தின் ஒரு அங்கத்துவ கட்சி என்ற போதும் அதனால் வெளியிடப்பட்ட கருத்து அரசாங்கத்தின் கொள்கையை பிரதிபலிக்காது எனத் தெரிவித்துள்ளார் அதுவும் நோர்வேக்கு கடிதத்தை (12ஆம் பக்கம் பார்க்க)

## இ.நி.ச. யோசனைக்கு எதிராக கொழும்பில் மாநாடு நடத்த ஏற்பாடு

தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனைக்கு எதிராக கொழும்பில் மாநாடு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

எதிர்வரும் 18 ஆம் திகதி இந்த மாநாடு கொழும்பின் விடுதி ஒன்றில் இடம்பெறவுள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனை நிறைவேற்றப்படுமானால் அதன் மூலம் இலங்கையை பிளவுப்படுத்தும் அதேநேரம் இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கும் குந்தகம் விளைவிக்கும் என்ற தொனிப்பொருளிலிலேயே இந்த மாநாடு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இதில் ஜேன்ஸ் டிபென்ஸ் வாராந்த இதழின் போல் ஹரிஸ் மற்றும் கனடாவின் டொரன்டோ ஸ்டார் இதழின் ஸ்டுவட் மெல், நோர்வே நாட்டின் பாதுகாப்புத்துறை ஆய்வாளர் எம். ரொவிக் உட்பட உள்ளூர் பிரதிநிதிகளும் உரையாற்றவுள்ளனர்

## சமாதான காலத்தில் சிறில. இராணுவம் தனது ஆயுத பலத்தைப் பெருக்கியுள்ளது

### - அமெரிக்க சிரேஷ்ட இராணுவ ஆய்வாளர் தெரிவிப்பு

விடுதலைப் புலிகளுடன் போர்நிறுத்த ஒப்பந்தத்தை 2002 பெப்ரவரியில் செய்துகொண்ட பின்னர் சமாதான காலத்தில் சிறிலங்கா இராணுவம் தனது ஆயுத பலத்தை பெரிதும் அதிகரித்து கொண்டிருப்பதாக அமெரிக்காவின் சிரேஷ்ட இராணுவ ஆய்வாளர் பிரியான் புலொஜெட் தனது நூல் ஒன்றில் தெரிவித்திருக்கின்றார். சிறிலங்காவின் விமானப்படை தனது ஆட்பலத்தை இருமடங்காக அதிகரித்ததுடன் இருபது புதிய விமானங்களை வாங்கியது. அதேவேளை சிறிலங்கா இராணுவம் தனது யுத்த தாங்கிகளை மூன்று மடங்காக அதிகரித்ததுடன் அதன் ஆர்ட்டிலரி சுடும் வல்லமையை இரு மடங்காக அதிகரித்தது என்று அவர் தனது நூலில் எழுதியுள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## 23 அரச, தனியார் நிறுவனங்களிலுள்ள அரசாங்கத்தின் பங்குகள் விற்பனைக்கு

அரசாங்கம் மற்றும் தனியார் துறையில் உள்ள சுமார் 23 நிறுவனங்களில் இருக்கும் அரசாங்க பங்குகளை விற்பனை செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அண்மையில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் பரிந்துரைக்கு அமையவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. பேர்க் எனப்படும் அரசாங்க தொழில் முயற்சிகளின் மீளமைப்பு ஆணைக்குழு இதற்கான முனைப்பை மேற்கொண்டு வருகிறது.

தேசிய சேமிப்பு வங்கி, கொமர்சல் வங்கி உட்பட்ட நிறுவனங்களே அவையாகும். இதற்கிடையில் மேலும் 12 அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களின் நிர்வாகங்கள் மீளமைக்கப்படவுள்ளன. இதேவேளை அரசாங்கத்தின இந்த நடவடிக்கைகள் யாவும் தனியார் மயத்திட்டத்தின் அம்சங்களேயாகுமென தொழிற்சங்கங்கள் குற்றம் சுமத்தியுள்ளன.

(32)

## இரவு படுக்கைக்குச் சென்ற மாணவன் காலை சடலமாக காணப்பட்டார்

(வடமராட்சி)

கரவெட்டி, நவிண்டில் பகுதியில் வீட்டில் இரவு உறக்கத்திற்குச் சென்ற பல்கலைக்கழக மாணவனொருவர் காலை வேளையினில் சடலமாகக் காணப்பட்டார். உயிரிழந்த மாணவன் யாழ்.பல்கலைக்கழகத்தின் கலைப்பீட 2 ஆம் வருட மாணவனான இளையதம்பி கருணா (வயது-22) ஆவார். நேற்று முன்தினமிரவு வழமை போன்று நித்திரைக்குச் சென்றிருந்த இவர் காலைவேளையினில் நித்திரை விட்டு எழுந்திருக்கவில்லையெனவும் கூறப்படுகின்றது. குறித்த பல்கலைக்கழக மாணவன் படுக்கையிலேயே உரியிழந்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

(27)

## கட்சியை மாத்திரமல்ல நாட்டையும் பாதுகாக்க உடன்பட்டிருக்கிறேன்

### - ஐ.தே.க மாநாட்டில் ரணில் தெரிவிப்பு

கட்சியை மாத்திரமல்ல நாட்டையும் பாதுகாக்க தாம் உடன்பட்டிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். நேற்று கட்சியின் 50 ஆவது சம்மேளன மாநாட்டில் உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க நாட்டின் இறைமையை பாதுகாக்கவும் தாம் உடன்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.1987 ஆம் ஆண்டு முதல் 1990 ஆம் ஆண்டு வரையில் ஜே.வி.பி நாட்டில் வன்முறைகளில் ஈடுபட்டதைப் போன்றே தற்சமயம் நாட்டில் பிரச்சினைகளை மேற்கொண்டு வருகின்றனர். அவர்கள் தற்போது மக்கள் மய வரவு செலவுத்திட்டம் எனக்கூறி சுமார் 5600 மில்லியன் ரூபாவை கொள்ளையடித்துள்ளார்கள் எனவும் ரணில் தெரிவித்தார்.

1987 ஆம் ஆண்டு ஜே.வி.பி யினர் அன்று பொது மக்களின் உடமைகளை கொள்ளையடித்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார். சமாதானம் தொடர்பில் ஜே.வி.பி காட்டி வரும் எதிர்ப்புகள் காரணமாக நாடு இன்று பாரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளது. சனாதிபதி சந்திரிகா (12ஆம் பக்கம் பார்க்க)

# வெலிக்கண்டல் பால முகப்பில் பார வாகனம் புதைந்தது

## - பலமணி நேரம் போக்குவரத்துத் தடைப்பட்டது



(அலுவலக செய்தியாளர்)

கண்டாவளைப் பாலத்தின் வாயிலில் பார வாகனம் புதைந்ததால் அதனூடான போக்குவரத்து நீண்ட நேரமாகத் தடைப்பட்டது.

பரந்தன் முல்லை பிரதான சாலையில் அமைந்துள்ள மிகப் பெரிய பாலமாகிய கண்டாவளை வெலிக்கண்டல் பாலம் அண்மையில் புனரமைப்புச் செய்யப்பட்டு போக்குவரத்திற்காக திறந்து விடப்பட்டிருந்தது. வேலைத் திட்டங்கள் முற்றுப் பெறாத நிலையில் மழை காலத்தில் போக்குவரத்தின் போது மக்கள் அடைந்த அசௌகரியங்களைக் கருத்தில் கொண்டு பாலத்தின் ஒருபகுதி மட்டும் பயன்படுத்தக் கூடியவாறு ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

நேற்று இவ்வழியாக பார வாகனமொன்று கிரவல் நிரப்பப்பட்ட நிலையில் அப்பாலத்தினைக் கடக்க முற்பட்டவேளை பாலத்தின் வாயிற்பகுதியில் புதைந்ததால் அதனூடான போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டது. மாலை மூன்று மணியளவில் புதைந்த இவ்வாகனத்தினை அப்புறப்படுத்த சம்பந்தப்பட்டவர்கள் தாமதம் காட்டியதால் நீண்ட நேரமாக மக்கள் பயணிக்க முடியாமல் சிரமங்களை எதிர்நோக்கினர். வீதியின் இருபக்கங்களிலும் வாகனங்கள் நீண்ட வரிசையில் பயணிக்கமுடியாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததோடு நீண்ட தூரம் பயணிக்கும் பெருந்தொகையான மக்களும் வீதிகளில் நின்றிருந்ததைக் காணக்கூடியதாகவிருந்தது. (ச)


## புத்தக கண்காட்சியும் விற்பனையும்

எமது நிறுவனத்தால் நவம்பர் 22முதல் 30 வரை நடாத்தப்பட்டுக்கொண்டிருந்த மேற்படி கண்காட்சியும் விற்பனையும் டிசம்பர் 15ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வன்னி வாழ்மக்களும், பொது நிறுவனங்களும் பயன் பெறும் வண்ணம் இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட அனைத்து வகையான தமிழ், ஆங்கில புத்தகங்களும் உள்நாட்டு வெளியீடுகளும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்.

சிறிலங்கா புத்தகசாலை,
234, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி. 021 2222573

(5358)


## முக்கிய அறிவித்தல்

குமாரபுரம் ஸ்ரீசித்திர வேலாயுதர் ஆலய கும்பாபிஷேக நிதிக்காக 17.11.2004அன்று நடாத்தப்படவிருந்த அதிர்ஷ்டலாபச்சீட்டு தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் 17.12.2004 வெள்ளிக்கிழமை ஆலய முன்றலில் அதிர்ஷ்டம் பார்க்கப்படும் என்பதை அனைத்து முருகன் அடியார்களுக்கும் அறியத்தருவதோடு விற்பனைக்காக வெளி இடங்களுக்கு எடுத்துச் சென்றவர்கள் அத்தினத்திற்கு முன்பு அடிக்கட்டைகளை ஆலய பரிபாலன சபையினரிடம் ஒப்படைக்கும்படி மிகத் தாழ்மையாகக் கேட்டுகொள்கின்றோம்.

(சி-11004) **ஆலய பரிபாலன சபையினர்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**திருமதி தம்பிப்பிள்ளை சின்னட்டி**

**மண்ணில்:15.03.1939**
**விண்ணில்:06.11.2004**

**பாலூட்டி தாலாட்டி வளர்த்த எம் தாயே**
**பாதியினில் எமை விட்டு பிரிந்ததேனோ மாயம்**
**சூரியனை உம் பெயரால் காண்கின்றோம் நாம் இங்கு**
**உறவுகளின் ஆறுதலால் தேற்றுகிறோம் எம் மனதை**
**உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகிறோம்.**

அந்தியேட்டி நினைவு நாள் 06.12.2004 (இன்று) அவரது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்தில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**மகன்**
**த.குணரத்தினம்,**
**நாகேந்திரபுரம்.**

**உங்கள் அன்பில் நிறைந்த**
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்,**

நி.முகவரி: **கலவெட்டித்திடல், ஈச்சங்காடு.**

(சி-11005)

## வரிவிளம்பரம்


### 2005 இற்கான புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

விசேட புலமைப்பரிசில் வகுப்பு, தரம் 6-11 வரையான வகுப்புக்கள்,விசேட சிங்கள வகுப்பு என்பன. 06.12.2004, மாலை 3.00 மணிக்கு கேம்பிறிஜ் கல்லூரி, உதயநகர், இல:-01 இல் ஆரம்பமாகிறது.தகவல் நிர்வாகி. (4944)

### வேழன் பதிப்பகம்

உங்கள் சகலவிதமான அச்சக வேலைகளையும் கணினிமூலம் வடிவமைத்து ஓவ்செற்றில் அச்சிட்டுப்பெற்றுக்கொள்ள வேழன் பதிப்பகம். கனகபுரம் வீதி, கிளிநொச்சி. (5284)

### காணி விற்பனைக்குண்டு

கிளி/வயர்லெஸ் A-9 வீதியில் சுமார் 150 மீற்றர் தூரத்தில் நல்ல சுற்றாடலும், அமைதியான சூழலும் குடியிருப்பதற்கும், சிறுகைத் தொழிற்சாலை நடாத்துவதற்கும் சிறந்த 3/4 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு. விலை 5 1/2 இலட்சம்.தொடர்புகட்கு அ.இராஜநாயகம், இல.100 விவேகானந்த நகர், கிளிநொச்சி. (சி-5319)

### விற்பனைக்குண்டு

பாவனைக்குரிய 5லான்ட் மாஸ்டர்கள் விற்பனைக்குண்டு. விலை நேரில் பார்த்து தீர்மானிக்கலாம். தொடர்புகளுக்கு S.உமா காந்தன் செல்வச்சுடர் பல்பொருள் உதிரிகள் வாணிபம்., கனகபுரம் வீதி, கிளிநொச்சி. (5325)


### தவறிவிட்டது

தமிழீழ வைப்பக 100ஆம் இலக்க 05 காசோலை முள்ளியவளைக்கும் முல்லைத்தீவுக்கும் இடையில் தவறிவிட்டது. காசோலை இலக்கமாக 264624, 264041, 264049, 264632, 264001 மேற்படி காசோலையைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். திரு.கு.நகுலன், விண்ணொளி மருந்து பால்மா நிலையம், தண்ணீரூற்று. (5336)

முல்லை மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம்

## உப்பு விநியோகம் தொடர்பான அறிவித்தல்

முல்லைத்தீவு மாவட்டத்தின் உப்பு விநியோக முகவராக முல்லை மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம் 03.12.2004 இல் இருந்து செயற்படுவதால் உப்பினைப் பெற்றுக்கொள்ள விரும்பும்

★ப.நோ.கூ.சங்கங்கள்
★தனியார் வர்த்தக நிறுவனங்கள்

கீழ்க்காண் விபரப்படியான முகவரியில் தொடர்புகொள்ளவும்.

**தலைவர்,**
**முல்லை மாவட்ட கூ.ச.ஒன்றியம்,**
**புதுக்குடியிருப்பு,**
**முல்லைத்தீவு.** (5067)

## பணிநிலை வேண்டுகை

### *பராமரிப்பாளர்*

**இனிய வாழ்வு இல்லத்தில் தங்கி நின்று கல்வி பயிலும் விழிப்புல வலுவிழந்த, காது கேளாத, வாய்பேசமுடியாத 6தொடக்கம் 15 வரையான வயதெல்லையைக்கொண்ட ஆண் சிறார்களை பராமரித்தல்.**

**★ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.**
**★*வயதெல்லை:* 30-45 வரையும் முல்லை மாவட்டத்தை நிரந்தர வதிவிடமாகக்கொண்டவர்களும் விரும்பத்தக்கது.**
**★க.பொ.த.(சா/த) பரீட்சையில் சித்தி பெற்றவராக இருத்தல் வேண்டும்.**

### *நடன ஆசிரியர்*

**மேற்படி பாதிப்புக்குள்ளான சிறார்களுக்கான நடனம் கற்பித்தல்.**

**★நடனக்கலையினை முறைப்படி கற்று முடித்தவராக இருத்தல் வேண்டும்.**
**★10.12.2004இற்கு முன்னதாக விண்ணப்பங்கள் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ இல்லத்தின் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.**
**★சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.**

முகவரி:
**இனியவாழ்வு இல்லம்,**
**வள்ளிபுனம்,**
**புதுக்குடியிருப்பு.**

**நிர்வாகத்தினர்,**
**இனியவாழ்வு இல்லம்.**

(5333)


**சகலவிதமான PII,PIII, PIV கணனிகளை மிகக்குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.**

**e-MAX**

***வாடகைக்கு***

* PII
* PIII
* PIV
* Laptop
* Multimedia projector
* Digital Camera
* Video camera with light
* Home studio system

***தொடர்புகொள்ளவேண்டிய இடம்:***

e-MAX
**புகையிரத நிலைய வீதி,**
**குருமன்காட்டு வீதி,**
**வவுனியா.**

(சி-10955)

# சனாதிபதி பதவியை தக்க வைத்துக்கொள்ள

# பெநாசிர், நவாஸ்செரீப்புடன் முஷாரப் பேரம்

(இஸ்லாமாபாத்)

**பாகிஸ்தான் சனாதிபதியாக நீடிக்க பெநாசிர், நவாஸ் செரீப்புடன் முஷாரப் பேரம் பேசி வருகிறார் எனவும் இடைக்கால அரசு அமைத்து அதில் அவர்களின் கட்சிகள் பங்கு பெறவும் அதன் பிறகு பாராளுமன்ற தேர்தல் நடத்தவும் முஷாரப் திட்டமிட்டு இருக்கிறார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.**

பாகிஸ்தானில் பிரதமர்களாக இருந்த பெநாசிர் பூட்டோவும், நவாஸ் செரீப்பும் இராணுவ தளபதி பர்வேஷ் முஷாரப் அதிபர் ஆனதும் நாடு கடத்தப்பட்டனர்.

பெநாசிர் தனது குழந்தைகளுடன் லண்டனிலும், டுபாயிலும் மாறிமாறி வசித்து வருகிறார். நவாஸ்செரீப் தனது குடும்பத்தினருடன் ஜெட்டாவில் வசிக்கிறார். முஷாரப் இராணுவத் தலைமைத் தளபதி பதவியிலும், அதிபர் பதவியிலும் நீடிக்கிறார்.

இதற்கு ஆறு கட்சிகள் அடங்கிய இஸ்லாமியக் கூட்டணி எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது. இதற்காக நாடு முழுவதும் போராட்டம் நடத்த அழைப்பு விடுத்துள்ளது.

இதனால் முஷாரப்பிற்கு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. தனது பதவியை தக்கவைத்துக் கொள்ள பெநாசிருடனும் நவாஸ் செரீப்புடனும் முஷாரப் பேரம் பேசி வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானில் இடைக்கால அரசு அமைத்து அதில் பெநாசிரின் பாகிஸ்தான் மக்கள் கட்சியும், நவாஸ்செரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சியும் இடம் பெறலாம் என்றும் அதன் பிறகு பாராளுமன்றத்தைக் கலைத்து தேர்தல் நடத்தலாம். அதில் எல்லாக் கட்சிகளும் போட்டியிடலாம் என்றும் தூதனுப்பியிருக்கிறார். தான் இராணுவ தலைமைத் தளபதி பதவியை இராஜிநாமாச் செய்து விட்டு அதிபராக நீடிக்க பெநாசிரும், நவாஸ்செரீப்பும் சம்மதிக்க வேண்டும் என்றும் முஷாரப் கூறி இருக்கின்றார்.

# ஈராக்கில் தீவிரவாதிகள் தாக்குதல்; 25 பேர் பலி; சிறைக்கைதிகள் தப்பினர்

(பாக்தாத்)


பாக்தாத் நகரில் மசூதி அருகே கார்க்குண்டு வெடித்தது. பொலிஸ் நிலையமும் தாக்கப்பட்டது. இந்தத் தாக்குதல்களில் 25 பேர் பலியானார்கள்.

ஈராக்கில் அமெரிக்க இராணுவத்திற்கு எதிராக இஸ்லாமியத் தீவிரவாதிகள் திடீர்த் தாக்குதல்களை நடத்திவருகிறார்கள். இந்தத் தாக்குதல்கள் நாள்தோறும் அதிகரித்து வருகிறது. இதில் அப்பாவி மக்களும், பொலிசாரும் உயிரிழந்து வருகிறார்கள்.

இந்த நிலையில் பாக்தாத் நகரில் சன்னிமுஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் அத்தாமாயா பகுதியில் அதிகாலை தொழுகையை முடித்து விட்டு ஏராளமானவர்கள் திரும்பிக் கொண்டிருந்தனர். அப்போது மசூதி அருகில் பயங்கரச் சத்தத்துடன் கார்க்குண்டு வெடித்தது. இந்தச் சம்பவத்தில் பொது மக்கள் 14 பேர் அதே இடத்தில் இரத்த வெள்ளத்தில் இறந்தனர்.

பாக்தாத் நகரின் தென்மேற்குப் பகுதியில் உள்ள பொலிஸ் நிலையம் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினார்கள். ரொக்கெற் குண்டுகளை வீசியும், துப்பாக்கியால் சுட்டும் தாக்கினார்கள்.

இதில் பொலிஸ் நிலையம் முன்பு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு வாகனங்கள் தீப்பிடித்து எரிந்தன. 11 பொலிசார் உயிரிழந்தார்கள். அந்தப் பகுதி முழுவதும் புகை மண்டலம் ஆனது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு காவலில் வைக்கப்பட்டிருந்த 50 கைதிகளை தீவிரவாதிகள் மீட்டுச்சென்றனர். ஜோர்தானைச் சேர்ந்த அபுமுசப் அல்-ஜர்காவி என்ற தீவிரவாத இயக்கம் இந்தத் தாக்குதலுக்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டது.



பாக்தாத்தில் பொலிஸ் நிலையம் முன்பாக சோதனைச் சாவடியில் நடத்தப்பட்ட கார்க்குண்டு வெடிப்பில் தீப்பற்றிய வாகனத்தை அணைக்கும் தீயணைப்புப் படைவீரர்.

# 134 நாடுகளில் மரண தண்டனை ரத்து தூக்கிலிடுவதில் சீனா முதலிடம்

ஐ.நா. சபை உலகில் 134 நாடுகள் தூக்குத் தண்டனை முறையை கைவிட்டுள்ளன. 62 நாடுகளில் அது இன்னும் நடைமுறையில் உள்ளது. 2003 இல் சீனாவில் மட்டும் 5 ஆயிரம் பேர் தூக்கிலிடப்பட்டனர்.

இது குறித்து ஐ.நா. அமைப்பு வெளியிட்ட ஆய்வறிக்கை:

உலகில் மொத்தம் 134 நாடுகள் தூக்குத் தண்டனை முறையை கைவிட்டுள்ளன. 84 நாடுகள் முழுமையாக அதை ரத்துச் செய்துள்ளன. 14 நாடுகள் சாதாரண குற்றங்களுக்கு தூக்குத் தண்டனை விதிப்பதில்லை என அறிவித்துள்ளன. ரஷ்யாவில் தூக்குத் தண்டனை முறையை ரத்துச் செய்ய காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது.

தூக்குத் தண்டனை அமுலில் உள்ள 32 நாடுகளில் கடந்த 10 ஆண்டுகளாக யாரும் தூக்கிலிடப்படவில்லை. 2003 ஆம் ஆண்டுக்குப் பிறகு 10 நாடுகள் தூக்குத் தண்டனை முறையை கைவிட்டுள்ளன. கஜகஸ்தான், தஜிகிஸ்தான் நாடுகளில் தூக்குத் தண்டனைக்கு ஏற்கனவே பல கட்டுப்பாடுகள் உள்ளன. பூட்டான், சமோவா, போஸ்னியா, ஆர்மீனியா ஆகிய நாடுகளிலும் கடந்த ஆண்டு முதல் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு உள்ளன.

உலகம் முழுவதும் 62 நாடுகள் தூக்குத் தண்டனை முறை அமுலில் உள்ளது. கடந்த 2003 இல் இந்நாடுகளில் மொத்தம் 5 ஆயிரத்து 523 பேர் பல்வேறு குற்றங்களுக்காக தூக்கிலிடப்பட்டனர். இதில், சீனாவில் மட்டும் 5 ஆயிரம் பேர் தூக்கிலிடப்பட்டனர். ஈரானில் 154 பேர், ஈராக்கில் 113 பேர் தூக்கிலிடப்பட்டனர். இவ்வாறு அந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.



நேற்று முன்தினம் மொசூல் நகரில் அமெரிக்கப் படைகள் மீது வெற்றிகரமாக தாக்குதல் நடத்திவிட்டு வெளியேறும் ஈராக் தீவிரவாதிகள் ஆதரவாளர்களுக்கு கையசைக்கின்றனர்.

# ஒசாமாவைப் பிடிப்பதற்கு பாகிஸ்தான் கூடுதல் உதவி செய்ய வேண்டும்

## -அமெரிக்க நிர்வாகம் வேண்டுகோள்

தீவிரவாதி ஒசாமாபின்லேடனைப் பிடிக்க பாகிஸ்தான் கூடுதல் உதவி செய்ய வேண்டும் என்று அமெரிக்கா கருத்துத் தெரிவித்துள்ளது. அமெரிகக அதிபர் புஷ்சை, பாகிஸ்தான் அதிபர் முஷாரப் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார். இதற்கு முன்னதாக அமெரிக்காவின் பத்திரிகைப் பிரிவுச் செயலாளர் ஸ்கார்ட் மெக்கலன் நிருபர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது, தீவிரவாதி ஒசாமா பின்லேடனை பிடிக்கும் முயற்சிக்கு பாகிஸ்தான் கூடுதல் உதவி செய்ய வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம். எனினும் தலிபான் தீவிரவாதிகள், அல்-ஹைதா தீவிரவாதிகள் வேட்டையில் இரு நாடுகளுக்கிடையே நெருங்கிய உறவு இருந்து வருகிறது. இந்த வேட்டையில் நாங்கள் தொடர்ந்தும் ஈடுபடவுள்ளோம். உளவுத்துறை விடயத்தில் நல்ல உறவு இருக்கிறது. இரு நாடுகளுக்கும் இதுவே முக்கியமான அம்சமாக திகழ்கிறது என்றார்.

# டயானாவின் காரை ஓட்டியஓட்டுனர் ஹென்றி பால் ஓர் உளவாளி எனத் தகவல்



இங்கிலாந்து இளவரசி டயானா கடந்த 1997 ஆம் ஆண்டு பாரீஸில் நடந்த கார் விபத்தில் காதலன் டோடியுடன்பலியானார்.

அந்தக் காரை ஓட்டிய சாரதி ஹென்றிபாலும் இதில் மரணம் அடைந்தார். இந்த விபத்தில் சதித் திட்டம் உள்ளதாக டோடியின் கோடீஸ்வரத் தந்தை ஏற்கனவே புகார் கூறி வந்தார். இந்த மர்மம் இன்னும் விலகவில்லை.

இந்த நிலையில் டயானாவின் காரை ஓட்டிய ஹென்றி பால் உளவுப் படையினரால் அமர்த்தப்பட்டவர் என்றும் டயானாவின் நடவடிக்கைகளை அவ்வப்போது உளவுப் படைக்கு தெரிவித்து வந்தார் என்றும் இங்கிலாந்து பத்திரிகைகளில் இப்போது செய்திகள் வெளிவந்துள்ளன.

டயானா மரணம் குறித்துவிசாரணை நடத்திய பொலிஸ் கமிஷனர் ஜான்ஸ்டீபன் இது பற்றி இப்போது விசாரணை நடத்துகிறார்.

# மோசடிக்காரரின் பேட்டி ஒளிபரப்பு பி.பி.சி நிறுவன முக்கிய தலைகள் உருளும்?

(லண்டன்)

போபால் விஷவாயு சம்பந்தமாக நிவாரணம் அளிப்பதாக ஏமாற்றுக்காரர் ஒருவர் பேட்டியை ஒளிபரப்பியதற்காக பி.பி.சி வெளிப்படையாக மன்னிப்புக் கேட்டது. கடந்த சில மாதங்களில் இது பி.பி.சி செய்த இரண்டாவது குளறுபடியாகும். இதையடுத்து பி.பி.சியில் பல முக்கிய தலைகள் உருளலாம் என்றுகூறப்படுகிறது.

நேற்று முன்தினம் போபால் விஷவாயு சம்பவத்தின் 20 ஆவது ஆண்டு நாள். இது குறித்து அஞ்சலிகளும் மற்றும் நிவாரணம் குறித்த பேச்சுக்கள் நடக்கும் போது பீபிசி, வேர்ல்ட் நிகழ்ச்சியில் போபால் விஷவாயுவால் பாதிப்பிற்குள்ளான 1 இலட்சம் குடும்பத்திற்கு 1200 கோடி டொலர் தரப்போவதாக பினிஸ் டிரா என்ற தகவல் தொடர்பாளர் கூறியதாக ஒளிபரப்பப்பட்டது. இதற்குப்பின், இச்செய்தி ரொய்ட்டர் போன்ற செய்தி ஏஜென்சிகளில் வெளியானதும் விஷவாயு பாதிக்கப்பட்ட போபால் உட்பட எல்லாப் பகுதிகளிலும் மகிழ்சசி ஏற்பட்டது. ஆனால், சில மணி நேரத்தில் "பினிஸ்டிரா எங்கள் நிறுவனத்தைச் சேர்ந்தவர் அல்ல. முந்தைய யூனியன் கார்பைடு கம்பனியை நாங்கள் எடுத்துக்கொண்ட பிறகு கடந்த 1989 இல் 40.7 கோடி டொலர் தந்துவிட்டோம்" என்று அறிவித்தது. இதற்குப் பின் பி.பி.சி நிறுவனம் விழித்துக்கொண்ட போது தன்னிடம் தகவல் தந்தது போலி ஆசாமி, அது புரளி என்றும் அறிவித்தது. நாங்கள் இச்செய்தியால் எப்படி ஏமாற்றப்பட்டோம் என்றும் விளக்கியது பி.பி.சி. ஆனால், இப்படிச் செய்திகள் வந்த போது வோஷிங்டனில் டோகம்பனி முன் பலர் ஆர்ப்பாட்டம் நடத்தினர். அவர்கள், "20 ஆண்டுகளானால் என்ன? 200 ஆண்டுகள் ஆனாலும் நாங்கள் நிவாரணம் கேட்டுப் போராடுவோம்." என்று கோஷம் எழுப்பினர். இப்படி சர்ச்சைகள் அதிகரிக்கக் காரணமான பி.பி.சி நிறுவனம் இப்படியொரு பெரிய மோசடி செய்தியில் ஏமாந்தது கண்டு அதிர்ந்து போய் இருக்கிறது. அதன புதிய டைரக்டர் ஜெனரல் மார்க் தாம்சன் ஏற்கனவே சீர்திருத்தங்கள் செய்து நிர்வாகத்தில் களையெடுப்பு நடத்த திட்டமிட்ட போது இந்தப் புரளிச்செய்தி அதிர்ச்சியைத் தந்திருக்கிறது.





பெருநாட்டைச் சேர்ந்த 20 வயதுப் பெண் கார்சியா 2004 ஆம் ஆண்டு உலக அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சீனாவின் தென்பகுதியில் உள்ள சான்யா நகரில் நேற்று முன்தினம் இரவு இந்த ஆண்டுக்கான உலக அழகிப் போட்டி நடைபெற்றது. இதில் இந்தியா, சீனா, ஜப்பான், அமெரிக்கா, மலேசியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 107 அழகிகள் கலந்துகொண்டனர்.



பிலிப்பைன்சில் ஏற்பட்ட சூறாவளியினால் பாதிக்கப்பட்டோர் நிவாரணம் பெற காத்திருப்பதையும் இடிபாடுகளுக்கூடாக நடந்து செல்வோரையும் காணலாம்.

# சர்வதேச மனித உரிமைகள் தினம்
# கிளிநொச்சியில் கொண்டாட ஏற்பாடு

-வடக்கு-கிழக்கு மனித உரிமைகள் செயலகம் தகவல்

(அலுவலக செய்தியாளர்)

**வடக்கு-கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தினால் இம்மாதம் 10ஆம் திகதி சர்வதேச மனித உரிமைகள் தினம் வெகுசிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது.**

கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இத்தினத்தையொட்டிய நிகழ்வில் இலங்கையின் தற்போதைய மனித உரிமைகள் நிலைப்பாடு தொடர்பான விசேட கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளதோடு, சர்வதேச மனித உரிமைகள் தொடர்பான வாசகங்கள் அடங்கிய பதாதைகள், மக்கள் கூடும் இடங்களில் கட்டப்பட்டு மனித உரிமையின் முக்கியத்துவத்தையும், அவை பேணப்பட வேண்டியதன் அவசியத்தையும் வடகிழக்கு மனித உரிமைகள் செயலகத்தினர் விளக்கிவரும் இதேவேளை எதிர்வரும் 10ஆம் திகதி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள சர்வதேச மனித உரிமைகள் தினத்திற்கு ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான மனித உரிமைகள் மூத்த ஆலோசகர் றொகான் எஜிரிசிங்க, கொட்பிறி குணதிலக ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

எனவே இந்நிகழ்விற்கு அனைவரையும் வருகைதந்து கலந்துகொள்ளுமாறு வடகிழக்கு மனித உரிமைகள் செயலகத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (ச,கு)

## கவின்கலை பயிற்சி நிலையம் வேண்டும்

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கவின்கலை பயிற்சி நிலையம் இல்லை. இதானல் இப்பகுதியில் உள்ள மாணவர்கள் புதுக்குடியிருப்பு அல்லது முள்ளியவளை ஆகிய இடங்களுக்கே செல்லவேண்டியுள்ளன. எனவே சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்குமாறு ஆர்வம் உடைய மாணவர்கள் கேட்கின்றார்கள். (05)

## வட்டக்கச்சி மருத்துவமனையில் சனவரி முதல் கிளினிக் சிகிச்சை

(அலவலக செய்தியாளர்)

கிளிநொச்சி வட்டக்கச்சி மருத்துவமனையில் இரத்தழுத்தம், சலரோகம், மூட்டு வாதம் மற்றும் வலிப்பு, முட்டு போன்ற நோய்களுக்கான (கிளினிக்) சிகிச்சைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் கடமை புரியும் வைத்தியர்கள் குறிப்பிட்ட தினங்களில் வட்டக்கச்சி மருத்துவமனையில் வைத்து மேற்படி கிளினிக் சிகிச்சையினை மேற்கொள்ளவுள்ளனர்.

இதனடிப்படையில் எதிர்வரும் 3.01.2005 அன்று சலரோகம், இரத்தழுத்தம், முட்டு மற்றும் வலிப்பு, மூட்டுவாதம் போன்ற நோய்களுக்கான கிளினிக் சிகிச்சை வட்டக்கச்சி மருத்துவமனையில் மேற்கொள்ளப்படவுள்ளது.

வட்டக்கச்சி, இராமநாதபுரம் போன்ற பகுதிகளிலுள்ள மேற்படி நோயாளர்கள் கிளினிக் சிகிச்சை மேற்கொள்ளும் பொருட்டு எதிர்கொள்ளும் போக்குவரத்து மற்றும் மழைபோன்ற பிரச்சினைகளைத் தவிர்க்கும் முகமாக இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதெனவும் இப்பிரதேசங்களிலுள்ள மேற்படி நோயாளர்கள் அன்றைய தினத்தில் வட்டக்கச்சி மருத்துவமனைக்குச் சென்று கிளினிக் சிகிச்சையினைப் பெற்றுக் கொள்ளும் வண்ணம் கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலா நிதி இ.சிவானந்தன் வேண்டியுள்ளார். (சோ)

# அரசு தகுந்த தீர்வை வழங்காவிடின் தமிழர் தம்தலைவிதியை தீர்மானிப்பர்.

-கூட்டமைப்பு பா.உ ரவிராஜ்

தமிழ் மக்கள் கடந்த 50 ஆண்டு காலமாக சிங்களப் பேரினவாத சக்திகளால் ஏமாற்றப்பட்டு வந்துள்ளார்கள் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; தமிழீழ விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் எனக் கூறும் காலம் இன்று மாறியுள்ளது. சிங்களப் பேரினவாத சக்திகள் தமிழ்மக்களைக் கடந்த காலங்களில் ஏமாற்றிவந்ததன் காரணமாகத் தமிழ் மக்கள் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தார்கள். இந்த ஆயுதப்போராட்டம் நியாயமானதும், அர்த்தமானதும் என்று தெரிவித்த ரவிராஜ் தற்போதைய அரசு தமிழ் மக்களுக்குரிய தீர்வினை வழங்க வேண்டும். இல்லையேல் தமிழ் மக்கள் தமது தலைவிதியைத் தாமே தீர்மானித்துக் கொள்வார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்ற கருத்தரங்கொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## 25 வீத நிதி எப்போது?

(முல்லை)

உலக வங்கியின் நிதி உதவியில் முல்லைத்தீவில் 50வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. அதில் 75வீதமான வேலைகள் நிறைவுசெய்யப்பட்டபோதும் 25வீதமான வேலைகளுக்கான நிதி இதுவரை வழங்கப்படவில்லையென பயனாளிகள் தெரிவித்தனர்.

இந்த வீடுகள் மிகவும் வறுமையானவர்களுக்கே முதற்கட்டமாக வழங்கப்பட்டபோதும் அவர்களுக்கு இந்த நிதிவழங்காததினால் தொடர்ந்து வீட்டுவேலையை நிறைவு செய்ய முடியாது மக்கள் திண்டாடுகின்றார்கள்.

தொடர் வேலைக்கான நிதி எப்போது தருவார்கள் என மக்கள் கவலையுடன் கேட்கின்றனர். (20)



தற்பொழுது பெய்துவரும் பெருமழையின் காரணமாக பூநகரி வாடியடிப்பிரதேசம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. சந்தைப்பகுதி, வர்த்தக நிலையங்கள் என்பனவற்றின் முன்பகுதி, பின்பகுதி என்பனவும் நீர் நிறைந்து காணப்படுகின்றது. இதனால் இப்பகுதியின் சூழல் மாசடைவதுடன் நுளம்புகள் பெருகி மலேரியா நோய் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறும் உண்டு. இதுவிடயமாகப் பொதுமக்கள் உரியவர்களிடம் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கின்றனர். அத்துடன் குளக்கரையை அண்டிய பிரதேசத்தில் குப்பை கூழங்களைப் போட்டு சிலர் குப்பைமேடாகப் பயன்படுத்தி வருகின்றனர். இச்செயற்பாட்டை உடன் நிறுத்துமாறும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (34)

# கல்வியியல் கல்லூரி டிப்ளோமாதாரர்கள் 1800 பேருக்கு ஆசிரிய நியமனம்

(வவுனியா செய்தியாளர்)

இலங்கையில் உள்ள தேசியக் கல்வியியற் கல்லூரிகளில் மூன்று ஆண்டுகால கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பாடநெறியைப் பின்பற்றி இம்மாதம் அதனைப் பூர்த்தி செய்யும் 1800 பேருக்கு சனவரி முதல் ஆசிரியர் நியமனம் வழங்கப்படவுள்ளன.

இவர்கள் அனைவரும் தமது சொந்த மாகாணங்களில் உள்ள தேசியப் பாடசாலைகளுக்கே நியமிக்கப்பட உள்ளதாக தெரியவருகின்றது. இவர்களில் 403 பேர் தமிழ்மொழி மூலப் பாடசாலைகளிலும், 1153 பேர் சிங்களமொழி மூலப் பாடசாலைகளிலும், 244 பேர் ஆங்கில மொழி மூலப் பாடசாலைகளிலும் நியமிக்கப்படவுள்ளனர். (10)

# சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடித்து தொற்று நோய்கள் பரவுவதை தடுக்கக் கோரல்

(அலுவலக செய்தியாளர்)

தற்போது ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாக தொற்று நோய்கள் ஏற்படக் கூடிய சாத்தியக் கூறுகள் தென்படுவதன் காரணமாக சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடித்து தொற்று நோய் ஏற்படுவதனை தவிர்த்துக்கொள்ளும் வண்ணம் கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி இ.சிவானந்தன் வேண்டுகை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; தற்போது ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாக குடிநீர் மாசுபடக் காரணமாக அமைந்துள்ளதுடன் இலையானின் பெருக்கம் அதிகரித்துள்ளதன் காரணமாக இதன்மூலம் தொற்று நோய்கள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் அதிகரித்துள்ளதெனவும், எனவே இதன் மூலம் வயிற்றோட்டம், நெருப்புக் காய்ச்சல் தோல் சம்பந்தமான நோய்த் தாக்கங்களுக்கு உள்ளாக நேரிடலாம்.

எனவே குடிநீரினைக் கொதித்து ஆறவைத்துப் பருகுவதுடன் உணவுகளை இலையான்கள் மொய்க்காத வகையில் மூடிப் பாதுகாப்பாகவும், சுற்றாடல்களைச் சுத்தமாகவும் வைத்திருப்பதுடன் சுகாதார விதிமுறைகளைக் கண்டிப்பாக கடைப்பிடிக்கும் படியும் வேண்டியுள்ளார். (சோ)

# பூநகரி – கௌதாரிமுனைவீதி போக்குவரத்து பாதிப்பு

(பூநகரி)

பூநகரி-கௌதாரி முனை வீதி பல இடங்களில் சேதமடைந்துள்ளதால் மக்கள் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர். பூநகரி சங்குப்பிட்டி வீதியிலிருந்து மேற்குப் புறமாக உள்ள கிராமங்களான கௌதாரி முனை, விநாசி ஓடை, மண்ணித்தலை, கல்முனை ஆகிய கிராம மக்களின் பிரதான வீதியாக இது காணப்படுகின்றது. 25 கி.மீ நீளமான இவ் வீதியின் பெரும்பகுதி வெள்ளக் காடாகக் காணப்படுகின்றது. இவ் வீதியில் ஐந்து இடங்களில் மதகுகள் கொண்டு வந்து ஒரு வருடமாகியும் பயனற்று சீர்செய்யப்படாமல் வீதி ஓரங்களில் கிடக்கின்றது. மருத்துவ வசதியோ அன்றி எந்த அடிப்படை வசதியும் இல்லாத மக்கள் பெரும் துன்பத்தை அனுபவித்து வருகின்றனர். இதனை விட அங்கு சேவை செய்யும் அரச ஊழியர்களும் பெரும் துன்பத்தை எதிர்நோக்கி வருகின்றனர். இது விடயமாக உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (34)

# வித்தியானந்தாக் கல்லூரியில் எயிட்ஸ் விழிப்புணர்வூட்டல்

(புதுக்குடியிருப்பு)

உலக எயிட்ஸ் தினத்தன்று இலங்கை செஞ்சிலுவைச் சங்க முல்லைக்கிளை மு/வித்தியானந்தாக் கல்லூரியின் ஆசிரியர்களுக்கும் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கும் ஓர் விழிப்புணர்வுக் கருத்தரங்கை கல்லூரிக் கேட்போர் கூடத்தில் நடாத்தியது. முல்லைமாவட்ட மாணவர்கள் மட்டத்தில் எமது கலாசாரப் பண்புகளைப் பாதுகாத்து எயிட்ஸ்சை இல்லாது ஒழிப்போம் எனும் தலைப்புக்கு அமைய வரையப்பட்ட சித்திரப் போட்டியில் பரிசு பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் இலங்கை செஞ்சிலுவைச் சங்க முல்லைக் கிளையின் புதுக்குடியிருப்புப் பிரிவுத் தலைவர் வே.பரமலிங்கம், உப.தலைவர் கா.மகாலிங்கம் ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர். அவ்வேளை எமது கலாச்சாரப் பண்புகளை நாமே பாதுகாத்து எயிட்ஸ்சினை இல்லாது ஒழிப்போம் எனும் வீடியோ படமும் காண்பிக்கப்பட்டது. (08)

# மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தால் கூட்டுறவுத்துறை அபிவிருத்தி புறக்கணிப்பு

-நிதி ஒதுக்கீடு எதுவுமில்லை

(முல்லை)

கூட்டுறவுத்துறையை அபிவிருத்தி செய்ய வடக்கு கிழக்கிற்கான மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் எதுவித ஆக்க பூர்வமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

கூட்டுறவுத் திணைக்கள அபிவிருத்திக்கு வடகிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் எந்தவிதமான நிதியும் இதுவரை ஒதுக்கவில்லையென முல்லை. மாவட்ட அரசஅதிபர் தெரிவித்துள்ளார்.

இராணுவ வன்செயல் காரணமாக பல ப.நோ.கூ.ச கிளைகள், தலைமைக் காரியாலயங்கள் என்பன முற்றாக அழிக்கப்பட்டுள்ள போதும இதுவரை இவர்களுக்கான அந்த நிதி கிடைக்கப்படவில்லையென்றும், இதனால்வேறு திணைக்களங்களிடம் நிதி பெற்றே காரியாலயங்கள் அமைக்கப்பட்டு வருவதாக முல்லை. மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் மோ.சிவமயம் தெரிவித்துள்ளார். (20)

# வலயமட்ட சிறுவர் நாடகப்போட்டி பிற்போடல்

(பூநகரி)

நேற்று நடைபெறவிருந்த சிறுவர் நாடகப்போட்டி தற்போதைய காலநிலைச் சீர்கேட்டால் பிற்போடப்பட்டுள்ளது. இத்தகவலை நேற்று முன்தினம் வலயக்கல்விப்பணிமனையில் நடந்த அதிபர் கூட்டத்தில் வலயக்கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் தெரிவித்துள்ளார். இப்போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும். (34)

# யாழ்.மாநகர சபை குப்பை, கூழங்களை அகற்ற சிறிலங்காப் படைத்தரப்பு பெரும் முட்டுக்கட்டை

## -நிலைமையைச் சீராக்க ஒருமாதகாலம் தேவை

(வடமராட்சி)

**யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சேரும் குப்பை, கூழங்களை அகற்றுவதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் அவற்றைக் கொட்ட வேண்டாமென படைத்தரப்புத் தடுத்துள்ளதால், தமது பகுதிகளில் சுகாதாரத்தைப் பேணுவதில் பாரிய நெருக்கடிகள் ஏற்படலாமென யாழ். மாநகரசபை ஆணையாளர் கலாநிதி கந்தையா-குணராசா அச்சம் வெளியிட்டுள்ளார்.**

இது தொடர்பாக மேலும் தெரிய வருகையில் மாநகரசபை எல்லையினுள் சேரும் குப்பை கூழங்களை எடுத்துச்சென்று கொட்டவென காக்கைதீவுப் பகுதியில் மாநகர சபைக்குச் சொந்தமான காணியொன்றுள்ளது. கடந்த 10 வருடங்களாக இப்பகுதியிலேயே இங்கு சேரும் குப்பைகளும் கொட்டப்பட்டு வந்திருந்தன. எனினும் அண்மையில் இப்பகுதிக்கு முன்னதாகவுள்ள வயற்காணிகளில் 25 குடும்பங்கள் அரச வீடமைப்புத் திட்ட உதவியுடன் குடியமர்த்தப்பட்டிருந்தன. இவ்வாறு குடியமர்த்தப்பட்ட குடும்பங்கள் காக்கை தீவுப்பகுதியில் குப்பை கூழங்கள் கொட்டப்படுவதால் தமது சுகாதார நிலை பாதிக்கப்படுவதாகக் கூறி எதிர்ப்புப் போராட்டங்களை நடாத்தியதுடன் குப்பை கூழங்களை ஏற்றிச் சென்ற வாகனங்களையும் திருப்பி அனுப்பி வைத்தனர்.

இதையடுத்தே காக்கை தீவிற்கு அப்பாலுள்ள சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட காணியொன்றினுள் குப்பை கூழங்களைக் கொட்டுவதற்கான மாற்று ஏற்பாடுகள் யாழ். அரச அதிபரால் செய்து வழங்கப்பட்டிருந்தது. எனினும் அப்பகுதியில் நிலைகொண்டுள்ள படையினரும் அங்கு குப்பை கூழங்களைக் கொட்டுவதற்கு அனுமதி மறுத்துள்ளதையடுத்தே மாற்று வழியின்மையால் சுகாதார நெருக்கடிகள் ஏற்படலாமென அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் யாழ்.மாநகரசபை எல்லைக்குள் சேரும் குப்பை கூழங்களை முறையாக அகற்றுவதற்கு ஆகக் குறைந்தது ஒரு மாதகால அவகாசமாவது தேவையென மாநகர ஆணையாளர் மேலும் கோரிக்கை விடுத்துள்ளார்.

மனித மற்றும் மிருகக் கழிவுகள் தவிர்ந்த ஏனைய கழிவுகளை வழமைபோன்று காக்கை தீவுப் பகுதியினில் கொட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறும் அவர் இதேவேளை படையினரால் தடைசெய்யப்பட்டுள்ள பகுதிக்கு அப்பாலுள்ள மற்றோர் பகுதியில் எஞ்சிய கழிவுகளைக் கொட்ட முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். அதற்கேற்ற வகையிலான அப்பகுதிக்கான போக்குவரத்து வழிகளை ஏற்படுத்தும் முயற்சிகளும் இடம் பெறுவதாகவும் கூறப்படு கின்றது.

இதனிடையே சாவகச்சேரி நகர சபைப் பகுதியிலும் குப்பை கூழங்களை அகற்றும் பணியில் படையினர் குறுக்கிடுவதாக அதன் செயலாளர் அண்மையில் குற்றஞ் சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (27)

## அதிபரின்றி இயங்கும் பாடசாலை!

(தென்மராட்சி)

விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயத்தில் இருந்து கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இடமாற்றம் செய்யப்பட்ட அதிபருக்கு மாற்றாய் புதிய அதிபர் ஒருவரை நியமிக்கும்படி இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (28)

## மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு விசேட செயற்றிட்டங்களுக்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை ஒட்டி யாழ்.குடாநாடெங்கும் பெண்கள் உரிமை, சிறுவர் உரிமை மற்றும் அடிப்படை மனித உரிமைகள் என்பவற்றை வலியுறுத்தும் விசேட செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

யாழ். குடாநாட்டிலுள்ள கிராமங்கள், பாடசாலைகள், பொது இடங்கள் என்பவற்றினை மையமாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ள இச் செயற்றிட்டத்தின் அமுலாக்கல் நடவடிக்கைகளில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகம், ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியம், சிறுவர் பாதுகாப்பு நிதியம், தமிழர் புனர்வாழ்வுக் கழகம், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், சர்வோதயம் என்பனவற்றுடன் ஊடகவியலாளர்களும் ஈடுபட்டுள்ளனர்.

அந்த வகையில் எதிர்வரும் 10ஆம் திகதி அனுஷ்டிக்கப்படும் உலக மனித உரிமைகள் தினத்தன்று சகல கிராமங்களிலும் மனித உரிமைகளை வலியுறுத்தும் பிரச்சார நடவடிக்கைகள், விழிப்புணர்வுக் கருத்தரங்குகள், போட்டி நிகழ்ச்சிகள் என்பன இடம் பெறவுள்ளன. (33)

## மழைநீரை வெளியேற்ற ஆராயுமாறு வற்புறுத்து

(தென்மராட்சி)

சுட்டிபுரம் குடமியன் பிரதான சாலையில் தேங்கிநிற்கும் மழை நீரை வெளியேற்றுவது குறித்து ஆராயும்படி சம்பந்தப்பட்ட தரப்புக்களிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சமீப காலமாகப் பெய்து வரும் மழையினால் குடமியன் பாடசாலை வீதியில் இருந்து சுட்டிபுரம் செல்லும் வீதியில் 300 மீற்றர் வரை நீர் நடுவீதியில் முழங்கால் வரை தேங்கி நிற்கிறது. இதனால் பாடசாலை செல்லும் மாணவர்கள் முதல் இச்சாலையைப் பயன்படுத்தும் பொது மக்கள் வரை பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.இது குறித்து கருத்துத் தெரிவித்த இப் பகுதி மக்கள் நீர்தேங்காமல் இருக்க வாய்க்கால்கள் அமைத்துத் தரும்படி கோரிக்கை விடுத்துள்ளனர். (28)

## தொடர் அடைமழையால் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் அடைமழை காரணமாக பல பகுதிகளிலும் வெள்ள அபாயங்கள் ஏற்பட்டுள்ளன. இதனால் சுமார் ஆயிரம் குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாகத் தெரியவருகிறது.

யாழ்.குடாநாட்டில் பெய்து வரும் மழை காரணமாக வடமராட்சி கிழக்கு, வலிகாமம் வடக்கு, தீவகம், தென்மராட்சி தெற்கு போன்ற இடங்களில் பெரும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக மேற்படி பிரதேசங்களில் உள்ள தாழ் நிலப் பரப்புக்களில் குடியிருந்து வந்தவர்களின் குடியிருப்புகளுள் வெள்ளம் புகுந்துள்ளன. வீடுகள் சேதமாகியுள்ளன. அத்துடன் வீதிப்போக்குவரத்துக்களும் பாதிக்கப்பட்டுள்ளன.குறிப்பாக தீவகத்தின் பல பகுதிகளுக்குமான போக்குவரத்துச் சேவைகள் துண்டிக்கப்பட்டதுடன் நேற்று முன்தினம் இரவுடன் முடிந்த 24 மணி நேரத்துள் யாழ். குடா நாடெங்கும் பரவலாக பெய்துள்ள அடைமழை காரணமாக இயல்பு நிலை பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தன. (33)

## மீன் பிடி வலைகள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சி வடக்கைச் சேர்ந்த 552 கடற்றொழிலாளர்களுக்கு "மூவி மென்டோ" என்ற சர்வதேச தொண்டர் நிறுவனத்தால் மீன்பிடி வலைகள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி பிரதேசத்திலுள்ள அதிகளவானோர் இராணுவ ஆக்கிரமிப்புகள் மற்றும் இடப்பெயர்வுகள் இவற்றால் ஏற்பட்ட சொத்தழிவுகள் என்பவற்றால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பாதிப்படைந்து பொருளாதார நிலைமையில் மிகமோசமான மட்டத்திலுள்ள வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர்களது தொழில் நடவடிக்கைகளை ஊக்குவிப்பதன் மூலம் அவர்களின் பொருளாதார நிலைமையை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டே இவ் உதவி வழங்கப்பட்டுள்ளது. (33)

## குடிநீர் விநியோகத்தை அதிகரிக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சி கரவெட்டி பிரதேச மக்களுக்கான குழாய் மூலமான குடிநீர் விநியோக நேரத்தை அதிகரிப்புச் செய்யுமாறு அப்பகுதி மக்கள் யாழ் .அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கரவெட்டிப் பிரதேசத்தில் குடிநீர் தட்டுப்பாடுகள் நிலவும் பகுதிகளிற்கு குழாய் மூலமாக குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகின்ற போதிலும் அவை காலையிலும் மாலையிலும் ஒரு சில மணி நேரத்திற்கு மட்டுமே விநியோகிக்கப்படுகின்றமையால் அப்பகுதி மக்கள் தமக்குத் தேவையான நீரினைப் பெறுவதில் பல இடர்பாடுகளை எதிர் கொள்கின்றனர்.

எனவே இதனைக் கவனத்தில் கொண்டு அனைத்து மக்களும் தமகுத் தேவையான அளவு குடிநீரைப் பெற்றுக் கொள்வதற்காக வேண்டி மேற்படி குழாய் மூலமான குடிநீர் விநியோக நேரத்தை அதிகரிப்புச் செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (33)

## தென்மராட்சியில் மீள்குடியமர அனுமதிக்காவிடின் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டம்!

### சிறிலங்கா அரசிற்கு பொதுமகன் ஒருவர் அறிவிப்பு

தென்மராட்சிப் பகுதியில் சிறிலங்காப்படையினரின் ஆக்கிரமிப்பால் இடம்பெயர்ந்து நிர்க்கதியான நிலையில் வாழும் குடும்பங்களை உரிய இடங்களில் மீள் குடியமர அனுமதியளிக்கப்படாதுவிடின் சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்போவதாக பொதுமகன் ஒருவர் அறிவித்துள்ளார்.

சாவகச்சேரி மறவன்புலவைச் சேர்ந்த செல்லக்கிளி ஆனந்த ரஞ்சன் என்பவரே இவ்வாறான எச்சரிக்கையை சிறிலங்காவின் மீள்குடியேற்றம் , புனர்நிர்மாணம், ,புனரமைப்பு அமைச்சின் பொது ஆணையாளர் கரீம் பீரிஸிற்கு விடுத்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: மறவன்புலோ, தனங்கிளப்பு, கைதடி. நாவற்குழி ஒரு பகுதி மக்கள் போரின் காரணமாக 12.12.1999 இல் இருந்து இடம் பெயர்ந்துள்ளனர்.கிட்டத்தட்ட 600 குடும்பங்கள் தமது சொந்த இடங்களிற்கு, வாழ்விடங்களிற்குத் திரும்ப முடியாமல் கடந்த நான்கு வருடங்களாகச் சொல்லமுடியாத துயரங்களையும் கஷ்ரங்களையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

நாம் இந்நீடிக்கின்ற பரிதாபகரமானதும் வறுமையானதுமான நிலையினைச் சகல அதிகாரமுடையவர்களிற்கும், அரசசார்பற்ற நிறுவனங்கள் உட்பட சகலரிற்கும் எடுத்துக் கூறினோம். ஆனால் நாம் இன்னும் எந்தவித நன்மைகளையும் பெறவில்லை. நான் மிகவும் பணிவோடு உங்களது கவனத்திற்கு இவ் 600 குடும்பங்களும் உடனடியாகத்தமது சொந்த இடங்களான மறவன்புலோ, தனங்கிளப்பு, கைதடி, நாவற்குழியின் ஒரு பகுதி ஆகிய பிரதேசங்களில் மீளக்குடியமர அனுமதிக்கவும் எமது பிரதேசத்திலுள்ள இரு பாடசாலைகளை உடனடியாக ஆரம்பிக்க விண்ணப்பிக்கின்றேன்.

நான் உமது எழுத்துமூலமான பதிலை 31.12.2004 இற்குள் எதிர்பார்ப்பதுடன் எமது மக்களை எமது கிராமத்தில் மீளக் குடியமர அனுமதிக்கவும் கேட்டுக்கொள்கின்றேன்.

இது தவறின் நான் பணிவுடன் உங்கள் கவனத்திற்கும் உலகிற்கும் அறியத்தருவது நான் சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை தென்மராட்சிப் பிரதேசசபையின் முன்னால் அல்லது யாழ். மாவட்ட செயலகத்தின் முன்பாக அல்லது மீள்குடியேற்றம் புனர்நிர்மாணம், புனரமைப்பு அமைச்சின் முன்னால் அல்லது பொருத்தப்படான ஒரு இடத்தில் 05.01.2005 இற்கும் 04.02.2005 இற்கும் இடையில் ஆரம்பிப்பேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

## ஜப்பானிய அரசின் நிதியுதவியுடன் யாழ்.இல். தகவல் தொழில்நுட்ப மையம்

(யாழ்ப்பாணம்)

ஜப்பானிய அரசின் நிதி உதவியுடன் யாழ்.மாவட்டத்தில் தகவல் தொழில்நுட்ப மையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.ஜப்பானின் 40 மில்லியன் ரூபா நிதியில் நவீனமயப்படுத்தப்பட்ட கணினித் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல் வசதிகளுடன் கூடியதாக அமைக்கப்படவுள்ள இக்கணினி மையமானது யாழ்நகரை அண்டியதாக நிறுவப்படும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டு கல்விச் சமூகத்தினரிடையே தகவல் தொழில்நுட்பசார் அறிவுகளை விருத்தி செய்யும் முகமாகவே இத்தொழில்நுட்ப மையம் நிறுவப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (33)

## 20 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாத வீதி!

### சீரபடுத்த வேண்டுகை

யாழ். தீவகத்திலுள்ள அல்லைப்பிட்டி -மண்கும்பான் வரையிலான பிரதான வீதி மிகமோசமாகச் சேதமடைந்த நிலையில் காணப்படுகிறது.கடந்த 20 வருடங்களுக்கு மேலாக புனரமைப்புச் செய்யப்படாது காணப்படும் மேற்படி வீதியின் சீரற்ற தன்மையால் அவ்வீதியூடாகப் பயணிக்கும் மக்கள் பெரும் அசௌகரியங்களை அனுபவித்து வருகின்றனர்.இது குறித்து அப்பகுதி மக்கள் பல தரப்பினரிடமும் முறையிட்டும் கூட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாமையால் மக்கள் விசனமடைந்துள்ளனர். (33)

# போரின் கொடூரத்துள் வாழ்வே சுமையாக...

தமிழீழ மண்ணின் மீது சிங்கள இனவாத அரசுகளும் அதன் கூலிப் படைகளும் மேற்கொண்ட மண் பறிப்பு மற்றும் இன அழிப்பு நடவடிக்கைகள் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள பெண்களின் வாழ்வு இப்போதும் அவலச்சுமை நிறைந்த ஒன்றாகவே தொடர்ந்து கொண்டிருக்கிறது.

தமிழ் மக்கள் மீதான போரினால் கடந்த 25 வருடங்களில் 80.000இற்கும் அதிகமான மக்கள் உயிரிழந்துள்ளனர். பல்லாயிரக்கணக்கானவர்கள் காயங்களுக்குள்ளாகியும் அங்கவீனமடைந்துமுள்ளனர் இலட்சக்கணக்கிலானோர் பாதுகாப்புத்தேடி இடம்பெயர்ந்து உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மக்களின் பெறுமதி வாய்ந்த சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளது. போரின் கோரத்தாக்கம் தலை விரித்தாடியதால் தாய் தந்தையை இழந்த பிள்ளைகளும், பிள்ளைகளை இழந்த தாய் தந்தையர்களும், கணவனை இழந்த மனைவியும், மனைவியை இழந்த கணவனுமாக இழப்புக்களை ஏற்படுத்தி வாழ்வுபற்றிய, எதிர்காலம் கேள்விக்குறியான நிலைப்பாட்டைத் தமிழ்மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

சிறிலங்கா அரசுகள் மேற்கொண்ட கொடூர யுத்தத்தின் விளைவுகள் பொதுவாக பெண்களைத்தான் அதிகம் பாதித்திருக்கிறது. அவ்வாறு பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்வு இன்னமும் சரியாகக் கட்டி எழுப்பப்பட வில்லை. இப்போதும் அவர்கள் பாதிப்புக்களுக்குள்ளேதான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களின் வாழ்வை கட்டி எழுப்புவதற்கான நிறுவனங்கள் இருந்தாலும், அவை அதற்காக இன்னமும் அதிகம் உழைக்க வேண்டியவர்களாக உள்ளனர். பாதிக்கப்பட்டவர்களைச் சரியான முறையில் இனங்கண்டு அவர்களின் பொருளாதார வலுவை உயர் வடையச் செய்து அதன் மூலம் அவர்களைச் சமூகத்தில் கட்டி எழுப்ப வேண்டும்.

இந்த நிலையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்களில் ஒருவரது வாழ்க்கை நிலை பற்றியும், அவர் தமது வாழ்வைக் கொண்டு நகர்த்தப்படும் துயரங்கள் பற்றியும் வாசகர்களாகிய உங்களுக்குத் தருகிறோம்.

பரந்தன் பிரதேச செயலகர் பிரிவில் உமையாள்புரம் கிராம சேவகர் பிரிவில் வசித்து வரும் சிறிஜெயலிங்கம் வில்வராணி என்ற இளம்குடும்பப் பெண் தனது கணவனை இழந்த நிலையில் வாழ்ந்து வருகிறார். கிளிநொச்சியில் இருந்து இடம் பெயர்ந்து ஸ்கந்தபுரம் பகுதியில் வாழ்ந்து வந்தபோது வறுமை தலைவிரித்தாட ஆரம்பித்தது. மூன்று பெண் குழந்தைகள். அப்போது அவர்களில் மூத்தபிள்ளை முதலாம் ஆண்டு கல்விகற்றுக் கொண்டிருந்தார். இரண்டாவது பிள்ளை மூன்று வயது நிரம்பிய குழந்தையாக இருந்தது. மூன்றாவது குழந்தை அப்போதுதான் பிறந்திருந்தது. இந்த வேளையில் நோய்த்தாக்கமும் தலைவிரித்தாடிக் கொண்டிருந்தது. அன்றாடம் கூலி வேலை செய்து தனது மனைவிக்கும், பிள்ளைகளுக்கும் அவர்களுடன் கூடி வாழ்ந்த வயோதிபர்களுக்கும் உணவு கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டது. இதைவிட குழந்தைகளுக்கு ஏற்படும் நோய்களுக்கு தனியார் மருந்தகங்களில் மருந்துகள் வேண்ட வேண்டிய நிலை. இந்த நிலையில் இவை அனைத்துக்கும் அன்றாடம் உழைக்கின்ற 80 ரூபா சம்பளம் போதாமல் இருந்தது. இந்த நிலையில் தமது உறவினர் ஒருவரின் வீட்டில் சில பொருட்களை எடுப்பதற்காக 1997ஆம் ஆண்டு வந்தபோது கணவர் காணமற் போய்விட்டார்.

இதனால் அன்றிலிருந்து தனது மூன்று பிள்ளைகளையும் கொண்டு வாழ்வை நகர்த்த வேண்டிய பொறுப்பு இவாிடம் தான் இருந்தது. அன்றா டம் கூலி வேலைகளுக்குப் போய் தனது பிள்ளைகளைப் படிப்பித்து வரும் இந்தத் தாய் பெரும் சுமைகளுடன் வாழ்கிறார்.

இப்போது அவர் நோய் வாய்ப்பட்ட நிலையில் உருக்குலைந்த சிறிய குடிசையில் சூழ்ந்திருக்கின்ற பெருவெள்ளத்தின் நடுவில் தனது மூன்று பிள்ளைகளுட னும், உமையாள் புரத்தில் வாழ்ந்து வருகிறார், இப்போது இவரது பிள்ளைகள் 6ஆம் ஆண்டு, 4ஆம்ஆண்டு, முதலாம் ஆண்டுகளில் பரந்தன் இந்துமகா வித்தியாலயத்தில் கல்வி கற்று வருகின்றனர். இவர்களின் படிப்புச் செலவே அதிகமாக இருக்கிறது. இந்தத் தாய்க்கான வேலை நெல்வயல்களில் களை பிடுங்குவது இதற்கான சம்பளம் 200 ரூபா மாத்திரம். நெல் விதைக் கப்படும் காலத்தில்தான் இவர் களுக்கான வேலை. ஏனைய நாட்களில் அயலவர்களின் வீடுகளில் அவ்வப் போது வேலை செய்வது தான்.



லோகீசன்

எனினும் இவரது அன்றாட வாழ்வுக்கு இதுமட்டும் எவ்வகையில் உதவும். எந்த நிறுவனங்களும் இவருக்கு சுயதொழில் வாய்ப்பை ஏற்படுத்த முயலவில்லை. அவர்களிடம் பல தடவை சென்று கேட்டும் ஒருவரும் திரும்பிப் பார்ப்பதாக இல்லை. அப்படியானால் இப்படியானவர்களின் வாழ்வு இப்படியே அர்த்த மற்றதாகவும், அவலம் நிறைந்ததா கவும் போவதா? என்று கேள்வி எழுப்புகிறார்கள் அயலவர்கள்.

அந்த இளம் தாய் "பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்வுக்கு உதவுவ தாகக் கூறும் நிறுவனங்கள் மற்றும் அரச அரசசார்பற்ற நிறுவ னங்கள் அனைத்திடமும் எனக்கு உதவுமாறு கேட்டேன், அவர்கள எவரும் எதுவும் செய்யவில்லை" என்றும் கூறுகிறார்.

இந்த நிலையில் பிள்ளைகளின் படிப்பை மேம்படுத்துவதற்காகவாவது யாரும் உதவமாட்டார்களா? அந்தச் சின்னஞ் சிறுவர்கள் இருக்கின்ற வீட்டையாவது யாரும் சீர் செய்வார்களா? என்ற கேள்வி அந்த கிராமத்தவர்களிடம் எழுகிறது. பார்த்தாலே பரிதாபகரமாக இருக்கிறது. மழை வெள்ளம் புகுந்து வீடு ஊற்றெடுத்திருக்கிறது. சிறிய குடிசை கிடுகள் அனைத்தும் உக்கியதால் மழை நீர் வீட்டினுள் வருகிறது. என்கிறார் அந்தப் பெண். இப்படித்தான் பெரும் துயரங்களுடன் தொடர்கிறது. போரினால் பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்வு. வாசகர்களே உங்களுக்கு எடுத்துக்காட்டியது ஒரு சம்பவம். இப்படிப்பல பெண்கள் இன்று தாயகத்தில் அவல வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களின் வாழ்வு மேம்படுமா? இல்லை இப்படியே தான் வாழ்வா...? தீர்மானிக்கட்டும் சம்பந்தப்பட்டவர்கள்.

# சமாதானம் குறித்த நம்பிக்கைகள் முற்றாகச் சிதையும் அபாயமுள்ளது

## திருமலை சமூக அமைப்புக்கள் கவலை

(திருமலை)

சமீப காலத்தில் மூதூர், கிண்ணியா- நடுஊற்று, அன்பு வழிபுரம், போன்ற பகுதிகளில் இடம்பெற்ற அப்பாவி மக்களின் உயிரிழப்புக்களும், சொத்தழிப்புக்களும். எந்த வகையிலும் நியாயப் படுத்தக் கூடியவையல்ல.

இந்த அடிப்படையில் தான் நாம் கடந்த 26, 27, 28ஆம் திகதிகளில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களையும், அதன் உச்சமாக இடம்பெற்ற உயிரிழப்புக் களையும் பார்க்கின்றோம் என இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின திருகோணமலை கிளையினர், அபிவிருத்திக்கும் புரிந்துணர்வு முன்னேற்றத்திற்கான இளைஞர் அணி, சமூக மாற்றத்திற்கான நடவடிக்கை அணி, சமூக அபிவிருத்தி ஆய்வு நிறுவனம், நசனல் விசன், கிழக்கு வள அபிவிருத்தி மையம், சகவாழ்வு அமையம், சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு என்பன இணைந்து கூட்டாக வெளியட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: மீண்டும் ஒரு யுத்தக் காற்று எம்மத்தியில் வீசத்தொடங்கி விட்டது. மீண்டும் சந்தேகங்களும் அவநம்பிக்கைகளும் தோன்றி விட்டன. கடந்த மூன்று வருடங்களாக நீடித்திருக்கும் யுத்தநிறுத்தம் மூவின மக்கள் மத்தியிலும் என்றுமில்லாதவாறு நம்பிக்கையைக் கட்டியெழுப்பியது. பாகுபாடில்லாமல் கொடிய யுத்தமொன்றின் முடிவை சகல மக்களும் கொண்டாடினர். ஆனால் எல்லாமே கனவாகி விட்டதோ. என நாம் அச்சப்படுகின்றோம். யுத்தம் ஓய்ந்து சமாதானக் காற்று வீசும் காலத்திலும் அவ்வப்போது இடம் பெறும் சமூக மோதல்களும், அப்பாவி மக்களின் உயிரிழப்புக்களும், மிகுந்த மனவேதனைக்கும் ஆதங்கத்திற்கும் உரியதாகும். குறிப்பாக யுத்த காலத்தில் எமது மாவட்டத்தில் நடைபெற்ற அப்பாவி மக்கள் மீதான உயிர்க்கொலைகளும் வன்முறைச் சம்பவங்களும் மிகுந்த மனவேதனைக்கு உரியதாகும். சமீப காலத்தில் இடம் பெற்ற மூதூர், கிண்ணியா- நடு ஊற்று, அன்புவழிபுரம், போன்ற பகுதிகளில் இடம்பெற்ற அப்பாவி மக்களின் உயிரிழப்புக்களும், சொத்தழிப்புக்களும். எந்த வகையிலும் நியாயப்படுத்தக் கூடியவையல்ல.இந்த அடிப்படையில் தான் நாம் கடந்த 26, 27, 28ஆம் திகதிகளில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களையும், அதன் உச்சமாக இடம்பெற்ற உயிரிழப்புக்களையும் பார்க்கின்றோம். இவ்வாறான சம்பவங்கள் நீடிப்பது சமூகங்களின் மத்தியிலிருந்து சமாதானம் குறித்த நம்பிக்கையை முற்றாகச் சிதைத்து விடும் அபாயமுள்ளது. ஒவ்வொரு சமூகத்திற்கும் தங்களது தனித்துவங்களையும், அரசியல் கோரிக்கைகளை வெளியிடுவதற்கான உரிமையையும் நாம் மதிக்கின்றோம். ஆனால் அப்பாவி மக்களின் மீதான தாக்குதல்களாலும், உயிரிழப்புக்களாலும் எதையும் சாதித்து விட முடியாது. ஆகவே ஒவ்வொரு சமூகத்திற்கும் இவ்வாறான சம்பவங்களைத் தடுத்து நிறுத்த வேண்டிய தார்மீகப் பொறுப்பு உண்டு. அறியாமையாலும், உணர்ச்சிவசத்தாலும், தோன்றும் இவ்வாறான சம்பவங்களைச் சமாதானத்திற்கு எதிரான தீயசக்திகள் பயன்டுத்திக்கொள்ளும் அபாயமுள்ளது. இனிவரும் காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாமல் தடுப்பதே திருகோணமலை வாழ் மூவின மக்களின் எதிர்காலக் கடமையாகும். நாம் உங்களிடம் மட்டுமே இதனைச் சொல்ல முடியும் என அந்தத் துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

## தாய்லாந்துடன் சிறிலங்கா பாதுகாப்பு கூட்டுறவு; பேச்சு நடத்த சந்திரிகா சனவரியில் பயணம்

இந்திய - சிறிலங்கா உத்தேச பாதுகாப்பு ஒப்பந்தத்துக்கு பல்வேறு தரப்பிலுமிருந்து பாரிய எதிர்ப்புக் கிளம்பியுள்ள வேளையில் தாய்லாந்துடனும் பாதுகாப்புக் கூட்டுறவு பற்றிக் கலந்துரையாடி இணக்கப்பாடு காண்பதற்கு சந்திரிகா அரசு முடிவு செய்துள்ளது. இந்த மாத இறுதிப்பகுதியில் தாய்லாந்துக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அந்நாட்டு பிரதமர் தக்சின் சினவதரவைச் சந்தித்து மேற்படி இந்தப் பாதுகாப்புக் கூட்டுறவு விவகாரம் குறித்தும் பேசவுள்ளார் எனத் தெரியவருகிறது. இதே வேளை அடுத்த மாத ஆரம்பத்தில் பங்களாதேசிற்கும் அடுத்த மாத இறுதியில் பாகிஸ் தானுக்கும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

# தென்னிலங்கை அரசியல்வாதிகளின் போக்கு பாரிய விளைவுகளுக்கு வழிவகுக்கும்

## -கொழும்பு பல்கலை விரிவுரையாளர் எச்சரிக்கை

(கொழும்பு)

தமிழீழத் தேசியத்தலைவரின் உரை தொடர்பாகத் தென்னிலங்கை அரசியல்வாதிகளால் கடைப்பிடிக்கப்படும் அசமந்தப் போக்கும் அவர்களின் அரசியல் தெளிவின்மையும் எதிர்காலத்தில் பாரிய விளைவுகளுக்கு வழி வகுக்க ஏதுவாக அமையுமென கொழும்பு பல்கலைக்கழக கலாநிதி ஒருவர் தெரிவித்துள்ளார். இது பற்றி மேலும் தெரிய வருகையில்; கொழும்பின் தனியார் ஊடகமொன்றில் நடைபெற்ற அரசியல் கலந்துரையாடல் ஒன்றில் கருத்துத் தெரிவித்த கலாநிதி கீதபொன்கலன் தமிழீழத்தேசியத் தலைவரின் உரை வரலாற்று முக்கியத்துவம் பெற்றது , தேசியத்தலைவரின் உரையில் பொறுமைக்கும் ஒரு எல்லை உள்ளது என்று கூறுவதற்கும் அப்பால் நாம் பொறுமையின் எல்லைக் கோடுகளை அடைந்தே விட்டோம். எனத் தெரிவித்திருக்கின்றமை உன்னிப்பாகக் கவனிக்கப்பட வேண்டும். என்று தெரிவித்துள்ளார். அதே நேரம் தென்னிலங்கை அரசியல் சக்திகளின் அசமந்தப்போக்கும் அரசியல் தெளிவின்மையும் பாரிய விளைவுகளை உண்டு பண்ணும் எனவும் தெரிவித்தார்.

## கடந்த வாரத்தில்



**25.11.2004-01.12.2004**

**25**

* இத்தாலியின் வடக்குப் பகுதியில் ஏற்பட்ட பூமியதிர்ச்சியில் கட்டடங்களும் சிலவீடுகளும் தரைமட்டமாகியது.

* தென்னாபிரிக்க முன்னாள் சனாதிபதி நெல்சன் மண்டேலா சிறையிலிருந்தபோது அவருக்கு வழங்கப்பட்ட 46664 என்ற இலக்கத்தில் எயிட்ஸ் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நூல்ஒன்றை வெளியிட்டார்.

**26**

* இந்தோனேசியாவின் கடற்கரை நகரான நபிர்பிரதேசத்தில் திடீரென ஏற்பட்ட பூகம்பத்தில் 17 பேர் பலியானதுடன் 130 பேர் காயமடைந்தனர் மேலும் 300 வீடுகள் தரைமட்டமாகின.



இடிபாடுகளிடையே...

* பாகிஸ்தானின் குஸ்தார் நகரில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் ஒருவர் பலியானதுடன் 14 பேர் காயமடைந்தனர்.

**27**

* சீனாவில் ஷான்சி மாகாணத்திலுள்ள ஆறு ஒன்றில் பேருந்து விழுந்ததில் 25 பேர் உயிரிழந்ததுடன் 24 பேர் காயமடைந்தனர்.

* ஈராக் தலைநகர் பாக் தாத்தின் அல்ரஷித் வீதி யிலுள்ள மத்திய வங்கி அருகேயும், விமான நிலைய மருகேயும், தெற்கு பாக் தாத்தின் வீதி யிலும் குண்டு வெடித்ததில் 6 பேர் பலியானதுடன் 13 பேர் காய மடைந்தனர்.



குண்டுவெடிப்பில்

* இந்தியாவின் ஈரோடுமாவட்டம் சத்திய மங்கலம் அடுத்துள்ள அவினாசியில் இருந்து புளியம்பட்டி செல்லும் முக்கிய வீதியிலுள்ள வீடொன்றினுள் தூத்துக்குடியிலிருந்து உப்பு மூட்டை ஏற்றி வந்த பாராவூர்தியொன்று திடீரென்று வீட்டின் மீது மோதி சுவர் இடிந்து விழுந்து உட்புகுந்ததில் வீட்டிலிருந்த 3 பேர் பலி.

* சீனாவின் மத்திய பகுதியாக ஹெனான் பிராந்தியத்தில் ருஷோவ் நகரில் உள்ள உயர் நிலைப் பள்ளி ஒன்றின் விடு தியில் மாணவர்கள் தூங்கிக் கொண்டி ருந்த வேளை மர்ம நபர் ஒருவர் புகுந்து மாணவர்களைக் கத்தியால் குத்தியதில் 8 மாணவர்கள் பலி.

* மத்திய ஆப்கானிஸ்தான் மலைப்பிரதேசத்தில் அமெரிக்க விமான மென்று மோதிச்சிதறி விபத்துக்குள் ளானதில் விமானத்தில் பயணித்த 6 பேரும் பலியாகினர்.

**28**



* சீனாவில் ஷான்சி மாநிலத் திலுள்ள நிலக்கரிச் சுரங்க மொன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 16.6 சுரங்கத் தொழிலாளர்கள் பலியாகினர்.

* சவுதியரேபியாவின் செங்கடல் துறைமுக நகரான ஜிகாத்தாவின் தீவிரவாதி எனச் சந்தேகிக்கப்படும் நபர் ஒருவரைப் பாதுகாப்புப் படையினர் சுட்டுக் கொன்றுள்ளனர்.

* ரஷ்ய ஆதரவுப் பிரதமர் விக்டர் ஜானுகோவிச்சை 24 மணிநேரத்திற்குள் பதவிநீக்கம் செய்ய வேண்டும் என உக்ரைன் எதிர்க்கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



எதிரணிஆர்ப்பாட்டம்

* ருமேனியாவில் சனாதிபதித் தேர்தலும் பாராளுமன்றத் தேர்தலும் இடம் பெற்றது.

*சீனாவின் தலைநகர் பீஜிங்கிலுள்ள பல்கலைக்கழகமொன்றின் மாணவிகள் எயிட்ஸ் விழிப்புணர்வு தொடர்பான பேரணியினை நடத்தினர்.



விழிப்புணர்வுப் பேரணி

* சென்னையிலிருந்து உத்தரப்பிரதேச மாநில தலைநகர் லக்னோவுக்கு அதிவேக ரயில் சென்றவேளை சுகிசினியா என்ற நிலையத்தில் ரயில் கட்டுப்பாட்டை மீறிச் சென்றதால் தண்டவாளத்தில் நின்று கொண்டிருந்த பயணிகள் மீது மோதியதில் 12பயணிகள் உடல் நசுங்கிப் பலியாகினர்.



ரயில் விபத்து



* ஆஷியான் மாநாட்டில் கலந்து கொள்ளவதற்காக இந்திய பிரதமர் மன் மோகன்சிங் லாவோஸ் பயணம்.


**29**

10நாடுகள் அங்கம் வகிக்கும் தென்கிழக்காசிய அமைப்பின் தலைவர்களது உச்சிமாநாடு லாவோஸ் தலைநகர் ஷியாட்டில் ஆரம்பமாகியது.

*ஜப்பானின் வடக்குத் தீவான ஹொக்கைடோவில் இடம்பெற்ற பூகம்பத்தில் 14பேர் காயமடைந்தனர்.

*தாய்லாந்து அரசாங்கத்தால் தேடப்பட்டுவந்த முக்தார்குரிங் என்னும் தீவிரவாதி தென்தாய்லாந்தில் பொலிசாரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

*பாகிஸ்தான் அணுகுண்டுகளைச் சுமந்துசெல்லக்கூடிய ஹாப்-3 ஹஸ்ணாவி என்ற ஏவுகணையை 5ஆவது தடவையாகப் பரிசோதித்தது.




ஏவுகணைப் பரிசோதனை

*வியட்னாமில் மண்சரிவுகளாலும் வெள்ளப்பெருக்காலும் 40பேர் பலியாகியுள்ளதுடன் 50இற்கு மேற்பட்டோர் காணாமற் போயுள்ளனர். இங்குள்ள 50 மாநிலங்களிலும் ஒருஇலட்சத்து 70 ஆயிரம் வீடுகள் நீரில் மூழ்கியுள்ளன.

**30**

*இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஆகாஷ் ஏவுகணை ஓரிசா மாநிலம் பால சோர் என்ற இடத்திலிருந்து 15 கிலோமீற்றர் தொலைவில் வங்கக்கடலில் அமைந்துள்ள சந்திப்பூர் ஏவுதளத்திலிருந்து வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.



ஓரிசாவில் பரிசோதனை

*இந்தோனேசியாவின் மத்திய யாவா எனுமிடத்தில் உள்ள சோலா நகர் ஜகார்த்தாவிலிருந்து புறப்பட்ட "லயன் ஏர்ஜெட்" விமானம் தரையிறங்கும்போது விபத்திற்குள்ளானதில் விமானத்தில் பயணம் செய்தவர்களில் 31பேர் பலியானதுடன் 61பேர் படுகாயமடைந்தனர். இச்சம்பவமானது மழைகாரணமாக விமான ஓடுதளத்தில் விமானம் வழுக்கிச் சென்றதால் ஏற்பட்டுள்ளது.



விமானவிபத்து

*அமைதி, முன்னேற்றம், வளங்களைப் பகிர்ந்துகொள்ளல் ஆகியவற்றுக்கான மாநாடுஒப்பந்தத்தில் இந்தியாவும் 10ஆசியான் நாடுகளும் கையெழுத்திட்டன. லாவோஸ் மாநாட்டில் இவ் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.




லாவோஸ் மாநாடு

**01**

*பாகிஸ்தானின் தென்மேற்குப் பகுதியில் செச்சின் இஸ்லாமியத் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 11பொலிசார் காயமடைந்தனர். மேலும் தீவிரவாதி ஒருவர் கொல்லப்பட்டதுடன் மற்றுமொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் திருமாவளவனுக்கு பாராளுமன்றக் கட்டடத்தில் வைத்துக் கௌரவிப்பு

(கொழும்பு)

தமிழ்நாடு விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் திருமாவளவனுக்கு நேற்று முன்தினம் சிறிலங்கா பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் வைத்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் மதிய போசன விருந்து வழங்கியதோடு அவருக்கு பொன்னாடை போர்த்தியும் கௌரவித்துள்ளனர்.

தமிழர் தாயகத்திற்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் திருமாவளவன் நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்திற்கும் விஜயம் செய்தார். அவரது இந்த விஜயத்தின்போது, பாராளுமன்றத்தில் அமைந்துள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அலுவலகத்தில் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்துக் கலந்துரையாடினர். அங்கு வைத்தே அவருக்கு மதிய போசன விருந்து அளிக்கப்பட்டதோடு, பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தனால் அவருக்கு பொன்னாடையும் போர்த்தப்பட்டது. ஈழத்தமிழர்களின் இன்றைய நிலை குறித்து கூட்டமைப்பினருடன் கலந்துரையாடிய திருமாவளவன், சிங்கங்களின் கோட்டையாக விளங்கும் பாராளுமன்றத்தில் மாவீரர் தின நிகழ்வுகளை நடத்தியது மிகப் பெரிய வரலாற்று ரீதியான சம்பவமெனக் கூட்டமைப்பு எம்.பி.க்களுக்கு புகழாரம் சூட்டினார். தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திற்கு தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் தமது பூரண ஆதரவை வழங்கி வருகின்றனர். ஆனால், அங்குள்ள அரசியல் நிலைமைகளாலும், அரசின் நிலைப்பாட்டாலும் ஈழத் தமிழ் மக்களின் போராட்டத்திற்கு ஆதரவாக வாய் திறப்பதற்கு அவர்கள் தயங்குகின்றனர். எனினும், ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திற்கு அவர்கள் தம்மாலான சகல உதவிகளையும் செய்வார்கள் என்றும் திருமாவளவன் மேலும் கூறினார். பாராளுமன்றத்திற்கான தனது விஜயத்தின்போது அவர் பார்வையாளர் கலரியில் சிறிது நேரம் அமர்ந்திருந்து சபை நடவடிக்கைகளையும் கவனித்தார்.

# பன்முகப்பட்ட வரவு -செலவுத் திட்டத்தின் கீழ் கண்டாவளைப் பி.செ.பிரிவுக்கு நிதி ஒதுக்கீடு

(கண்டாவளை)

கண்டாவளைப் பிரதேச செயலர்பிரிவில் பன்முகப் படுத்தப்பட்ட வரவு -செலவுத் திட்டத்தில் (2004) பல அபிவிருத்திப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் முரசு மோட்டை பழையகமம் வீதிக்கு 01 இலட்சம் ரூபாவும்,பெரியகுளம் கிராமத்தில் பாலர் பாடசாலை அமைக்க 01 இலட்சம்ரூபாவும், கண்டாவளைக் கிராமத்தில் சிறுவர் பூங்கா அமைக்க ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவும், தருமபுரம், பிரமந்தனாறு பகுதிகளில் உள்ள பாலர் பாடசாலைகளுக்கு தளபாடம் வழங்க எழுபத்தையாயிரம் ரூபாவும், முரசுமோட்டை கரைச்சி பிரதேசசபை உப அலுவலக நூலகத்துக்கு புத்தகங்கள் வழங்க ஐம்பதாயிரம் ரூபாவும், முரசுமோட்டை சேற்றுக்கண்டி குளம்திருத்த ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவும், தருமபுரம் தம்பிராசபுரம் அ.த.க பாடசாலை கட்டடம் அமைக்க இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் இப்பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட 30 பயனாளிகளுக்கு விவசாய உப கரணங்கள் வழங்கப்படவுள்ள தாகவும் பிரதேசசெயலர் சி.சத்தியசீலன் தெரிவித்துள்ளார். (14)

# போக்குவரத்துக்கு உதவாத வீதி குறித்து மக்கள் கவலை

(முல்லை)

புதுக்குடியிருப்பு கேணியடி வீதி மக்கள் போக்குவரத்து உகந்ததாக இல்லையெனக் கவலை தெரிவித்தனர்.

புதுக்குடியிருப்பு ஏனைய வீதிகள் தார் ஊற்றப்பட்டு புனரமைப்புச் செய்தபோதும் இவ்வீதி இதுவரை திருத்தப்படவில்லையெனத் தெரிவித்தனர்.

இதனால் இவ்வீதியில் பயணிக்கும் பொதுமக்கள் பெரும் இன்னலைச் சந்திக்கின்றனர். இப்பாதை திருத்தப்படுமா? பழைய நிலைக்கு வருமா? என இப்பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர். (20)

## வீரவணக்கம்
## 3 ஆம் ஆண்டு நினைவலைகளில்

தாயின் மடியில் 02 - 01 - 1984



தாயக மண்ணில் 06 - 12 - 2001

தமிழீழத் தேசியத் துணைப்படை வீரர்

**மோகனதாஸ்**

சுபாஸ் மோகனதாஸ்


பாரதிபுரம் கிழக்கு, கிளிநொச்சி.

06.12.2001 அன்று மணலாற்றுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலின்போது வீரச்சாவடைந்தார். இம் மாவீரருக்கும், இந்நாளில் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்

"தமிழீழ காவல்துறை சிறப்புப் படையணியினர்" (5334)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 04 - 06 - 1936



விண்ணில் 06 - 11 - 2004

06.11.2004 இல் இறைபாதம் எய்திய

எம் இதய தெய்வம்

**பொடிசிங்க சிறிசேன**

ஒட்டறுத்தகுளம்,வவுனிக்குளம்

*அன்பின் திருவுருவாய் பாசத்தின் பிறப்பிடமாய்*
*பண்பின் சிகரமாய் ஊர் புகழும் உத்தமனாய்*
*வாழ்ந்து எமக்கெல்லாம் வழிகாட்டிய தெய்வமே!*
*நீங்கள் மறைந்து ஒரு மாதம் சென்றாலும்*
*உங்கள் நினைவு என்றென்றும் எமைவிட்டு நீங்காது*
*உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்*


06.12.2004 இல் 31 ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வு எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் உற்றார் உறவினர்கள், நண்பர்கள், போராளிகள் அனைவரையும் மதிய போசனத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

*தகவல் மருமகன்*
*மா.லோகநாதன்*

*(5337)*

## 05 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 13 - 02 - 1984



வீரஉதிர்வு 06 - 12 - 1999

**வீரவேங்கை அருணன்**

சித்திர வேலாயுதம் சுஜிந்தன் [மதன்]

(அல்வாய் மேற்கு- அல்வாய்,யாழ்ப்பாணம்)

*மாண்பற்ற இவ்வுலகில்*
*மனிதனாய் வாழ விளைந்தவரே*
*மரணம் உம்மை மறந்துவிடவில்லை...*
*மறுபிறவியாய் நீர் எம்மில் நிலைத்திருப்பீர்*

தகவல்:-குடும்பத்தினர்,
இராமநாதபுரம்,
வட்டக்கச்சி.

த.மு:-426/6
இராமநாதபுரம்,வட்டக்கச்சி.

(4943)

## பயணிகள் போக்குவரவு ஊர்தி உரிமையாளர் கவனத்திற்கு!

2005 ஆம் ஆண்டு பயணியர் போக்குவரவில் ஈடுபடும் ஊர்தி வழி ஒப்புதல் பெறுவதற்கான மீளாய்வு கீழ்வரும் கால ஒழுங்கில் நடைபெறும்

| வட்டகை | நாள் | தொடங்கும் நேரம் | முடிவு நேரம் |
|---|---|---|---|
| புதுக்குடியிருப்பு | 15.12.2004 | காலை 09.30 | மாலை 03.30 |
| | 16.12.2004 | காலை 09.30 | மாலை 03.30 |
| | 17.12.2004 | காலை 09.30 | மாலை 03.30 |
| மல்லாவி | 15.12.2004 | காலை 10.00 | மாலை 04.00 |
| | 16.12.2004 | காலை 10.00 | மாலை 04.00 |
| வெள்ளாங்குளம் | 17.12.2004 | காலை 10.00 | மாலை 04.00 |
| | 18.12.2004 | காலை 10.00 | மாலை 04.00 |
| கிளிநொச்சி | 18.12.2004 | காலை 09.30 | மாலை 03.30 |
| | 19.12.2004 | காலை 09.30 | மாலை 03.30 |
| தாளையடி | 20.12.2004 | காலை 10.00 | மாலை 04.00 |
| | 21.12.2004 | காலை 10.00 | மாலை 04.00 |

| வட்டகை | இடம் |
|---|---|
| புதுக்குடியிருப்பு | மரமடுவத்தின் அருகில் உள்ள வளாகம் |
| மல்லாவி | பேருந்து நிலையம் |
| வெள்ளாங்குளம் | பேருந்து நிலையம் |
| கிளிநொச்சி | பேருந்து நிலையம் |
| தாளையடி | பளை பேருந்து நிலையம் |

முகாமையாளர்,
பயணியர் போக்குவரவு ஊர்தி
வழியனுமதிப் பணியகம்,
புதுக்குடியிருப்பு

(சி.10952)

## வாடகை ஊர்தி உரிமையாளர் கவனத்திற்கு!

2005 ஆம் ஆண்டு பயணியர் போக்குவரவில் ஈடுபடும் ஊர்தி வழி ஒப்புதல் பெறுவதற்கான மீளாய்வு கீழ்வரும் கால ஒழுங்கில் நடைபெறும்

| வட்டகை | நாள் | தொடங்கும் நேரம் | முடிவு நேரம் |
|---|---|---|---|
| புதுக்குடியிருப்பு | 15.12.2004 | காலை 09.30 | மாலை 03.30 |
| | 16.12.2004 | காலை 09.30 | மாலை 03.30 |
| | 17.12.2004 | காலை 09.30 | மாலை 03.30 |
| மல்லாவி | 15.12.2004 | காலை 10.00 | மாலை 04.00 |
| | 16.12.2004 | காலை 10.00 | மாலை 04.00 |
| வெள்ளாங்குளம் | 17.12.2004 | காலை 10.00 | மாலை 04.00 |
| | 18.12.2004 | காலை 10.00 | மாலை 04.00 |
| கிளிநொச்சி | 18.12.2004 | காலை 09.30 | மாலை 03.30 |
| | 19.12.2004 | காலை 09.30 | மாலை 03.30 |
| தாளையடி | 20.12.2004 | காலை 10.00 | மாலை 04.00 |
| | 21.12.2004 | காலை 10.00 | மாலை 04.00 |

| வட்டகை | இடம் |
|---|---|
| புதுக்குடியிருப்பு | மரமடுவத்தின் அருகில் உள்ள வளாகம் |
| மல்லாவி | பேருந்து நிலையம் |
| வெள்ளாங்குளம் | பேருந்து நிலையம் |
| கிளிநொச்சி | பேருந்து நிலையம் |
| தாளையடி | பளை பேருந்து நிலையம் |

முகாமையாளர்,
பயணியர் போக்குவரவு ஊர்தி
வழியனுமதிப் பணியகம்,
புதுக்குடியிருப்பு

(சி.10951)

# இந்தியாவிலிருந்து கொழும்பு வந்த போலிச் சாமியார் கைது

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து சுற்றுலா விசாவில் இலங்கை வந்திருந்த போலிச் சாமியார் எனக் கருதப்படும் ஒருவரை கொம்பனித்தெருப் பொலிசார் கைது செய்துள்ளனர்

இவர் பெண்களுடன் துர்நடத்தை முறையில் நடந்து கொண்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் நேற்றுமுன்தினம் காலை கொம்பனி வீதிப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் தொடர்பாக பொலிசாருக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ள நிலையில் பெண் பொலிஸ் உறுப்பினர் ஒருவரை குறிப்பிட்ட சாமியாரிடம் அவர்கள் அனுப்பியபோது சாமியார் அவரிடமும் விரும்பத்தகாத முறையில் நடந்துக்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே போலிச் சாமியாரைப் பொலிசார் கைது செய்தனர். தற்சமயம் பொலிசாரின் காவலில் வைக்கப்பட்டுள்ள அவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்படவுள்ளார். (32)

# குற்றவியல் சட்டத்தை மேலும் வலுப்படுத்த வேண்டும்

## -சிறிலங்கா நீதியமைச்சர் தெரிவிப்பு

குற்றச்செயல்களைத் தடுப்பதற்கு குற்றவியல் சட்டம் மேலும் வலுப்படுத்தப்படவேண்டும் என்று நீதியமைச்சர் டபிள்யு.டி. செனவிரட்ண தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் இடம் பெற்ற விவாதமொன்றில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், குற்றச்செயல்களின் எண்ணிக்கை அதிகரிக்காத போதிலும் அவை மேலும் திட்டமிடப்பட்டவையாகவும், பாரதூரமானவையாகவும் காணப்படுகின்றன என்றும் அவர் கூறினார். ஒரு பரிகார நடவடிக்கையாக குற்றவியல் சட்டம் திருத்தியமைக்கப்பட வேண்டும் என பலர் கூறியிருப்பதாகவும், சட்ட நடவடிக்கைகள் தாமதிக்கப்படுவது தீர்த்து வைக்கப்பட வேண்டிய பிரச்சினையாகுமென்றும் அமைச்சர் கூறினார்.

மேல் முறையீட்டு நீதிமன்றத்தை பன்முகப்படுத்துவது இதற்கு ஒரு தீர்வாகும் என்றும் குறிப்பிட்ட அவர் அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்தியமைப்பதன் மூலம் மாற்றத்தைக் கொண்டுவர தாம் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெறுவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.


## உலக வங்கியின் உதவியுடன் செயற்படுத்தும் வடகிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத்திட்டம்

### வடக்கு கிழக்கு மாகாணசபை

உலக வங்கியின் உதவியுடன் வடகிழக்கு மாகாணத்தில் செயற்படுத்த உள்ள வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லும் நோக்குடன் அரச காணியில் குடியிருக்கும் நபர்களுக்கு அக் காணி சம்பந்தமாக வலிதான ஆவணம் இல்லாவிடில், வழங்கப்பட்ட ஆவணம் தவறியிருப்பின் உரிமை கோருவதில் பிரச்சினை, எல்லைப் பிரச்சினை 15.06.1995இற்கு முன்பு அத்து மீறிப்பிடிக்கப்பட்ட காணியை சீர்ப்படுத்தல் அல்லது வேறு ஏதாவது பிரச்சினை இருப்பின் கீழே தரப்பட்டுள்ள மாதிரிப்படிவம் போன்று ஒரு விண்ணப்பத்தைத் தயாரித்து காணி அமைந்துள்ள பகுதிக்குரிய பிரதேசசெயலாளர்/ உதவி அரசாங்க அதிபரிடம் 31.12.2004 இற்கு முன் வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

சம்பந்தப்பட்டவர்களின் வசதி கருதி விண்ணப்பிக்க வேண்டிய விண்ணப்பப் படிவங்களை அந்தந்தப் பிரதேச செயலகங்கள்/உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களில் இலவசமாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன

எஸ்.ரங்கராஜா,
துலைமைச்செயலாளர்,
வடகிழக்கு மாகாணசபை.

*பிரதேச செயலாளர்/அரசாங்க அதிபர்*

.......................................................

### அரச காணிகளில் குடியிருப்போர் காணிகள் சம்பந்தமான தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்குத் தீர்வு கோருதல்

*************************************

01.விண்ணப்பதாரியின் முழுப்பெயர்:-.............................................

02.விலாசம்:-.............................................................................

03.காணியின் விபரம்:-

3.1.கிராமசேவையாளர் பிரிவு:-.............................

3.2.கிராமம்:-.........

3.3.குடியேற்றத் திட்டத்தின் பெயர்:-.............................................

3.4.விஸ்தீரணம்:-.......................................

3.5.எல்லைகள்:-

வடக்கு:-................
கிழக்கு:-................
தெற்கு:-................
மேற்கு:-................

3.6.விண்ணப்பதாரிக்கு சட்டபூர்வமாக வழங்கப்பட்ட காணியா?:- ஆம்/இல்லை

3.7.வேறு யாருக்காவது சட்டபூர்வமாக வழங்கப்பட்ட காணியா?:- ஆம்/இல்லை

3.8.அ) அடாத்தாகப் பிடிக்கப்பட்ட காணியா? ஆம்/இல்லை

ஆ) அப்படியாயின் எப்போது:-

3.9. பிரிக்கப்பட்ட காணித்துண்டா:- ஆம்/இல்லை

3.10.எல்லைப்பிரச்சினையா? :- ஆம்/இல்லை

3.11.உரிமை கோருவதில் பிரச்சினையா?:- ஆம்/இல்லை

04. விண்ணப்பதாரிக்கு உத்தரவுப்பத்திரம் அல்லது அளிப்பு வழங்கப்பட்டிருப்பின்
அதன் இலக்கமும் திகதியும்:-.............................................

05.காணியில் உள்ள பிரச்சினையும் கோரிக்கையும்:-.............

5.1.சட்டபூர்வமாக வழங்கப்பட்ட காணிக்கு உத்தரவுப் பத்திரம் வழங்கப்படவில்லையா? ஆம்/இல்லை

5.2.பிரிக்கப்பட்ட (Sub Divided) காணிக்கு வலிதான ஆவணம் வழங்கப்படவில்லையா?:- ஆம்/இல்லை

5.3.வழங்கப்பட்ட ஆவணம் தவறியுள்ளதா? ஆம்//இல்லை

5.4.15.06.1995இற்கு முன் அடாத்தாகப்பிடித்த காணிக்கு உத்தரவுப் பத்திரம் வழங்க வில்லையா?:- ஆம்/இல்லை

5.5. சட்டபூர்வமாக வழங்கப்பட்ட காணியில் வேறு நபா அடாத்தாக இருக்கின்றாரா? ஆம்/இல்லை

06. பின்னுரிமை பிரச்சினை:- ஆம்/இல்லை

07.அடுத்துறுத்தற் பிரச்சினை:- ஆம்.˙.இல்லை

திகதி:-.................... (சி.10953) ..............................
விண்ணப்பத்தாரியின் கையொப்பம்



## மு/புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம்(வ.து)

### பதவி வெற்றிடம்

கீழ்க் குறிப்பிடப்படும் சாரதி பதவிக்கு புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கத்தின் எல்லைப்பரப்பிலுள்ள நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் தாமாகவே விண்ணப்பப் பத்திரங்களைத் தயாரித்து எதிர்வரும் 2004.12.15 ஆம் திகதிக்கு முன் "தலைவர் புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம், புதுக்குடியிருப்பு" என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும்.

**பதவி:-** சாரதி (தற்காலிகம்)

**சம்.குறி.இல:-** 312/13

**சம்பள அளவுத்திட்டம்:-** 4000-75x10-80x10-5550/= அத்துடன் காலத்திற்குக்காலம் வழங்கப்படும் சம்பள அதகரிப்பும் உண்டு.

**தகுதிகாண் காலம்:-** 6 மாதங்கள்

**தகைமைகள்**

01. 05 ஆம் வகுப்பு சித்தியுடன் பஸ்,லொறி, உழவு இயந்திரம் பெட்டியுடன் செலுத்துவதற்கேற்ப சாரதி அனுமதிப்பத்திரம் அத்துடன் 04 வருட அனுபவம்.
02. வயதெல்லை 30 இற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
03. கொழும்பு சென்று வரக்கூடிய வாகனம் செலுத்துவதற்கேற்ப அனுபவம்.

தலைவர்,
மு/புதுக்குடியிருப்பு
ப.நோ.கூ.சங்கம்.(வ.து)
புதுக்குடியிருப்பு.

(சி.10521)



## பணிநிலை வேண்டுகை

கோடன் தானியங்கிப் பொறியியல் நிறுமத்திற்குக் கீழ்வரும் பணிநிலைகளில் வெற்றிடங்கள் உள்ளன

**காசாளர், கணக்குப் பதிவாளர், களஞ்சியக்காப்பாளர், கணனி இயக்குநர்**

**காசாளர்:-**
*அகவை:18–45 வரை (ஆண்,பெண் இருபாலரும்)*
*கல்வித்தகைமை:–க. பொ. த. சாதாரண தரத்தில் தேறியிருத்தல் வேண்டும்.*
*பணிநிலையில் பட்டறிவு உடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்*

**கணக்குப்பதிவாளர்:-**
*அகவை:18–45 வரை (ஆண்,பெண் இருபாலரும்)*
*கல்வித்தகைமை:–க. பொ. த. உயர்தரத்தில் வர்த்தகம் பயின்று கணக்கியலில் தேறியிருத்தல் வேண்டும்.*
*பணிநிலையில் பட்டறிவு உடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்*

**களஞ்சியக்காப்பாளர்:-**
*அகவை:18–45 வரை (ஆண்கள் மட்டும்)*
*கல்வித்தகைமை:–க. பொ. த. சாதாரண தரத்தில் தேறியிருத்தல் வேண்டும்.*
*ஊர்தி உதிரிகள் தொடர்பான பட்டறிவு உடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்*

**கணனி இயக்குநர்:-**
*அகவை:18–45 வரை (ஆண்,பெண் இருபாலரும்)*
*கல்வித்தகைமை:–க. பொ. த. சாதாரண தரத்தில் தேறியிருத்தல் வேண்டும்.*
Microsoft Office *கற்றிருத்தல் வேண்டும். பட்டறிவு உடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். ஆங்கில மொழி அறிவுடையோர் விரும்பத்தக்கது.*

**நேர்முகத்தேர்வு:-**

*நாள்:13. 12. 2004 (திங்கட்கிழமை) காலை:10. 00 மணி*
*இடம்:–கோடன் தானியங்கிப் பொறியியல் நிறுமம்*
*யாழ். சாலை,*
*பரந்தன்.*

நேர்முகத்தேர்விற்கு வருகை தருவோர் கல்விச்சான்று, அடையாள அட்டை, குடும்பப் பதிவு அட்டை கொண்டுவருதல் வேண்டும்.

*பணிப்பாளர்,*
*கோடன் தானியங்கிப் பொறி யியல் நிறுமம்.*

(5338))


# டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இன்னும் 3 ஆண்டு ஆடுவேன்





'ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் மீண்டும் விளையாடும் எண்ணம் இல்லை' என்று அவுஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர் வோர்ன் கூறியுள்ளார்.

ஒரு நாள் போட்டியில் வோர்ன் அணிந்து வந்த 23 ஆம் இலக்க ரீசேட்டை துடுப்பாட்ட வீரா மைக் கல் கிளார்க்கிடம் ஒப்படைக்கும் நிகழ்ச்சி மெல்போர்னில் நடந்தது. இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசுகையில் கூறியதாவது. ஒரு நாள் போட்டியில் விளையாடுவதை நான் விரும்புகிறேன். இருப்பினும் மீண்டும் ஒரு நாள் போட்டிக்கு திரும்பும் திட்டம் இல்லை. டெஸ்ட் போட்டியில் தொடர்ந்து இன்னும் 3 ஆண்டுகள் விளையாட வேண்டும் என்ற எண்ணம்உள்ளது .அது சாத்தியமானது என்ற நம்பிக்கை இருக்கிறது என்றார்.

மேற்கிந்தியத்தீவு கிரிக்கெட் அணி அடுத்த மாதம் அவுஸ்திரேலிய அணியுடன் முத்தரப்பு ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் பங்கேற்கின்றது. இதற்காக மேற்கிந்திய அணி வீரர்கள் கடும் பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர்.




# அவுஸ்.க்கு எதிரான முதலாவது ஒருநாள் போட்டி நியூசிலாந்து அணிக்கு நான்கு விக்கெட் வெற்றி



அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுலாவை மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கும் அவுஸ்திரேலிய அணிக்கும் இடையில் நேற்று மெல்பேனில் நடைபெற்ற முதலாவது ஒரு நாள் போட்டியில் நியூசிலாந்து அணி 4 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணித்தலைவர் பிளெமிங் அவுஸ்திரேலிய அணியை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தார்.

இதன் படி அவுஸ்திரேலிய அணி நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் 9 விக்கெட்டுக்களை இழந்து 246 ஓட்டங்களைப் பெற்றது.



துடுப்பாட்டத்தில் கில்கிறிஸ்ட் 68, லீமன் 50, கிளார்க் 36, பொண்டிங் 29, ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றனர். சைமன்ஸ் ஓட்டம் எதுவும் பெறாமல் ஆட்டமிழந்தார்.

பந்து வீச்சில் கிறிஸ்கெயான்ஸ், டானியல் விக்டோரி தலா 3 விக்கெட்டுக்களையும், ஜேக்கப் ஓரம் 2விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 247 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களம் புகுந்த நியூசிலாந்து அணி ஓட்டமெதுவும் பெறாமல் பிளெமிங்கின் விக்கெட்டை இழந்து இக்கட்டான நிலையில் இருந்த போதும் அஸ்லே, சிங்ளேயர் இணை சிறப்பாக ஆடி இரண்டாவது விக்கெட்டுக்காக 128 ஓட்டங்களைக் குவித்து நம்பிக்கை ஏற்படுத்தியது. அஸ்லே 70 ஓட்டங்களுடனும், சிங்ளேயர் 48 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க நிதானமாக ஆடிக் கொண்டிருந்த மார்சலுடன் ஜோடி சேர்ந்த ஜேக்கப் ஓரம் அதிரடியாக ஆடிய போது 24 ஓட்டங்களுடன் ஆட்ட மிழந்தார்.



இதனால் நியூசிலாந்தின் வெற்றி இலக்கு கடினமாக மாற பின்னர் களம் புகுந்த மக்கலம் 13 பந்துகளில் 20 ஓட்டங்களை ஆட்டமிழக்காது அதிரடியாகப் பெற 49.4 ஓவரில் நியூசிலாந்து வெற்றி இலக்கை அடைந்தது. மார்சல் ஆட்டமிழக்காது 50 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில் பிரெட்லீ, லீமன் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக மார்சல் தெரிவானார்.

இவ் வெற்றி மூலம் 3 போட்டி கொண்ட ஒரு நாள் தொடரில் நியூசிலாந்து 1-0 என்ற நிலையில் முன்னணி வகிக்கின்றது.

# தொலைக்காட்சி மறு ஒளிபரப்பு காலபந்து போட்டிகளிலும் அவசியம்



சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் புதிய நிறைவேற்று அதிகாரியாக வரும் சனவரி 31 ஆம் திகதி பதவியேற்கவுள்ள பிரையன் பார்விக் போட்டிகளின் தீர்ப்பை இலகுபடுத்துவதற்காக தொலைக்காட்சி மறு ஒளிபரப்பு அவசியம் என தெரிவித்துள்ளார்.

பார்விக்முன்னர் B.B.C யினதும் ITVயினதும் விளையாட்டுத்துறை அதிகாரியாக கடமையாற்றியவராவர்.

ஆட்டத்தின் போது பந்து இலக்கை நோக்கி சென்றதா என்பதை அறிய T.V மறு ஒளிபரப்பு மூலம் அறியலாம் என்றும் அதனை தவறு விடுவது முட்டாள் செயல் என்றும் கூறுகிறார்.




றக்பி போட்டிகளில் T.V பயன்படுத்துவது போல உதைபந்தாட்டத்திலும் பயன்படுத்தலாம், பந்து இலக்கு நோக்கி அடிக்கப்படும் போது மின்னல் வேகத்தில் செல்வதால் அதுஇலக்கினுள் சென்றதா தூண்களில் மோதியதா என்பதை அறிய முடியும் என்றும் அவர் விளக்கியுள்ளார். போட்டியின் வேகம் அதிகரிப்பதால் ஏனைய தீர்ப்புக்களுக்கு T.V யைப் பாவிப்பது கடினம் என்றும் ஆனால் என்ன தவறு நடைபெற்று போட்டி மீண்டும் தொடருகிறது என்பதை அறிய முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

# இந்திய அணி வங்கதேசம் வந்தால் கொல்லப்படுவர்- தீவிரவாதிகள் எச்சரிக்கை

இந்தியக் கிரிக்கெட் அணி வங்காளதேசத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2டெஸ்ட் மற்றும் 3 ஒரு நாள் போட்டியில் விளையாடவிருக்கின்றது. இந்திய-வங்காளதேசம் அணிகள் இடையான டெஸ்ட் தொடர் வரும் 9ஆம் திகதி டாக்காவில் தொடங்குகின்றது.

இந்திய அணி நாளை வங்காளதேசம் புறப்பட்டுச் செல்கின்றது. இந்நிலையில் வங்களாதேசம் செல்ல இருக்கும் இந்திய வீரர்களுக்கு அங்குள்ள தீவிரவாத அமைப்பு மிரட்டல் விடுத்துள்ளது. டாக்காவில் உள்ள இந்திய தூதரகத்துக்கு ஹர்கத்-வுல்-ஜிகாத் என்ற தீவிரவாத அமைப்பு மிரட்டல் கடிதம் அனுப்பியுள்ளது. அந்தக் கடிதத்தில் இந்திய வீரர்கள் வங்காளதேசம் வந்தால் கடும் விளைவுகளைச் சந்திக்க வேண்டி வரும் என்று கூறப்பட்டிருக்கின்றது. இதை வங்களாதேசத்துக்கான இந்திய தூதர் வீனாசிக்ரி தெரிவித்தார்.

இந்தியத் தூதரகம் இந்தத் தகவலை மத்திய அரசுக்கும், இந்திய கிரிக்கெட் வாரியத்துக்கும் தெரிவித்துள்ளது. என்றாலும் இந்திய அணி திட்டமிட்டபடி வங்களாதேசம் வரும் என்று அந்நாட்டு கிரிக்கெட் வாரிய நிர்வாகி தெரிவித்தார்.

# டேவிஸ் கிண்ண டென்னிஸ் போட்டி ஸ்பெயின் அணி முன்னிலையில்

டேவிஸ் கோப்பை டென்னிஸ் தொடரில் ஸ்பெயின் அணி 2-0 என்ற முன்னிலையுடன் உள்ளது.

ஸ்பெயினில் உள்ள செவிலி நகரில் டேவிஸ் கோப்பை டென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டி நடக்கிறது. இதில் அமெரிக்கா, ஸ்பெயின் அணிகள் மோதி வருகின்றன. நேற்று முன்தினம் நடந்த முதல் போட்டியில் ஸ்பெயின் அணியின் முன்னணி ஆட்டக்காரரான கார்லோஸ் மோயா, அமெரிக்காவின் மார்டி பிஷ்சை எதிர்த்து விளையாடினார். தனது அனுபவ ஆட்டத்தால் மோயா6-4, 6-2, 6-3 என்ற நேர் செட்களில் பிஷ்சை வீழ்த்தினார். இரண்டாவது போட்டியில் உலகின் இரண்டாம் நிலை வீரரான அமெரிக்காவின் ஆன்டி ரோடிக், ஸ்பெயினின் இளம் வீரரான ராபெல் நாடலுடன் மோதினார்.

நாடல் துடிப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். ரோடிக்குடன் 3மணி, 38 நிமிடங்கள் போராடிய இவர் இறுதியில் 6-7, 6-2, 7-6, 6-2 என்ற செட்களில் அபார வெற்றி பெற்றார். இதன் மூலம் ஸ்பெயின் அணி 2-0 என்ற வலுவான முன்னிலையுடன் உள்ளது. அடுத்து நடக்கவிருக்கும் இரட்டையர் போட்டியில் நாடல், டாமி ரோபர்டோ ஜோடி, அமெரிக்காவின் பாப், மைக் பிரையன் சகோதரர்களை எதிர்த்து விளையாட உள்ளது. இதில் வெற்றி பெறும் பட்சத்தில் ஸ்பெயின் அணி இரண்டாவது முறையாக டேவிஸ் கோப்பையை கைப்பற்றலாம்.

# தென்னாபிரிக்க அணிக்கு சுழற்பந்து வீரர் அவசியம் முன்னாள் வீரர் ஜோண்டி ரோட்ஸ்

தென்னாபிரிக்க அணியில் நல்ல சுழற்பந்து வீச்சாளர் இருந்திருந்தால் இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் முடிவு மாறியிருக்கும் என தென்னாபிரிக்க அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரர் ஜோண்டிரோட்ஸ் கூறியிருக்கிறார். இது குறித்து ரோட்ஸ் நிருபர்களிடம் கூறியதாவது, இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்கா தோல்வியைத் தழுவியது. இறுதி நாளில் 100 ஓட்டங்கள் எடுக்க வேண்டிய நிலையில் இருந்த இந்திய அணியை நல்ல சுழற்பந்து வீச்சாளர் இருந்திருந்தால் திணறடித்திருக்க முடியும். இதனால், முடிவு மாறியிருக்கக்கூடும் என்றார்.

# மேற்கிந்தியதீவின் புதிய பயிற்சியாளராக அவுஸ்திரேலியாவின் பெனட்கிங்



நீண்டகால பிரிவுக்கு மத்தியில் மேற்கிந்தியதீவுகள் கிரிக்கெட் அணியின் தொழில் நுட்ப ஆலோசகரும், புதிய பயிற்றுநரான அவுஸ்திரேலியாவின் பெனட்கிங்கும் அளவளாவியுள்ளனர். இதன்போது பெனட்கிங் தன்னைப் போன்றே திறமை வாய்ந்தவர் என முன்னாள் அணித்தலைவர் காபீல்ட் சோபர்ஸ் தெரிவித்துள்ளார். சோபர்ஸ் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் தொழில்நுட்ப ஆலோசகராகப் பணியாற்றுகிறார். தனது நோக்கமும் அவரது நோக்கமும் ஒரே மாதிரியானதாக இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கிங் கருத்துத் தெரிவிக்கும்போது, சோபர்ஸ் ஆடுகளத்தில் காட்டிய திறமை போன்றே தற்போதும் திறமை காட்டுகிறார் என்றும், அதே திறமையை வீரர்களும் வெளிப்படுத்த வேண்டும் என்றார். விளையாட்டின்போது அவர் புதுமைகளை செய்பவர் என்றும் செய்ய வேண்டிய பணிகளை அவர் தெரிந்து வைத்திருக்கிறார் என்றும் கிங் தெரிவித்துள்ளார். மேற்கிந்தியத்தீவுகள் அணி கிங்கின் பயிற்சிக்குப் பின்னர் முதலாவது போட்டியாக V.B கிண்ணத்துக்கான போட்டிகளில் அவுஸ்திரேலியாவுடன் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சம்பியன் கோப்பை ஹொக்கி; பாக்., நெதர்லாந்து அணிகள் வெற்றி




சம்பியன்ஷிப் ஹொக்கி போட்டியில் நடப்பு சம்பியன் நெதர்லாந்து 5-2 என்ற கோல் கணக்கில் நியூசிலாந்தைத் தோற்கடித்தது.

லாகூரில் நடைபெறும் சம்பியன் ஷிப் ஹொக்கிப் போட்டியில் நேற்று முன்தினம் நடப்பு சம்பியன் நெதர்லாந்தும், நியூசிலாந்து அணியும் மோதின. இதில் நெதர்லாந்து 5 கோல்களும், நியூசிலாந்து இரண்டு கோல்களும் போட்டன. இதனால், 5-2 என்ற கோல் கணக்கில் நெதர்லாந்து வெற்றி பெற்றது.

இதேவேளை, ஜெர்மனியை 3-1 என்ற கோல் கணக்கில் வென்றது பாகிஸ்தான். இப்போட்டி லாகூரில் சனிக்கிழமை நடைபெற்றது.

போட்டியை நடத்தும் பாகிஸ்தான் தான் பங்கேற்ற முதல் ஆட்டத்திலேயே வெற்றிபெற்று தாயக ரசிகர்களுக்கு மகிழ்ச்சிப்படுத்தியது.

இப்போட்டியைக் காண தேசிய ஹொக்கி ஸ்டேடியம் நிரம்பிவழிந்தது. முதல் பாதி ஆட்டம் முடிய சற்று நேரத்துக்கு முன்பு பாகிஸ்தானின் புகழ்பெற்ற வீரர் சோஹைல் அப்பாஸ் பெனால்ட்டி கோர்னர் வாய்ப்பில் கோல் கணக்கைத் தொடங்கினார்.



**சிந்தனைக்கு**

போராட்ட வடிவங்கள் மாறலாம்; ஆனால் எமது போராட்ட இலட்சியம் மாறப்போவதில்லை.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 06-12-2004
தொலைபேசி
தொலைநகல் } 021-2283948,060-2213244
மின் அஞ்சல் Daily@eezhanatham.com

## நண்பர்கள் யார்?

"தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை மட்டுப்படுத்துவதற்காக எந்த வொரு வல்லரசுடனும் கைகோர்த்துக் கொள்ளவும் இந்தியாவின் கேந்திர நலன்களைச் சிதைத்துவிடக் கூடிய அளவிற்கு வல்லரசு நாடுகளின் தலையீடுகளை அனுமதிக்கவும் சிறிலங்கா அரசாங்கம் தயாராக இருக்கின்றது" என்ற பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களின் கூற்றுக்கள் நிதர்சனமானவை வரலாற்று அடிப்படையிலான படிப்பினை.

சிறிலங்கா ஆட்சியாளர்கள் இன்று இந்தியா மீது அன்புமழை பொழிகின்றார்கள். இந்தியாவிற்காக எதையும் செய்யவும் தயாராகவுள்ளதாகக் காட்டிக்கொள்ள விளைகின்றார்கள். இந்தியா ஐ.நா.சபையில் நிரந்தர உறுப்பு நாடாகுவதற்குத் தமது ஆதரவை அளிக்கவும் இவர்கள் தயாராகவுள்ளனர். இதனை வெளிப்படுத்தியும் உள்ளனர்.

இத்தனைக்கும் இவர்கள்– அதாவது சிறிலங்கா ஆட்சியாளர்களின் கடந்தகாலத்தில் இந்தியா தொடர்பாகக் கொண்டிருந்த நிலைப்பாடுகள் எவ்வாறாக இந்திய விரோத சக்திகளாக இவர்கள் செயற்பட்டனர் என்பதை வெளிப்படுத்தப் போதுமானவையாகும்.

இலங்கையை மாறிமாறி ஆண்ட சிங்களக்கட்சிகள் இரண்டுமே இன்று இந்தியா தொடர்பாக வெளிப்படுத்தும் கொள்கைகள் முன்பு இருந்ததில்லை. சிறிலங்காவின் சுதந்திரத்தையடுத்து ஆட்சிக்கு வந்த ஐ.தே.கட்சி இந்தியா சார்புகொள்கை என்பதைவிட மேற்குலகம் சார்ந்த கொள்கையையே கடைப்பிடித்து வந்தது. இந்தியாவை இப்பிராந்தியத்தின் பலம்பொருந்திய சக்தி எனக் கொள்ளவில்லை.

அடுத்ததாக ஆட்சிப்பீடத்தில் ஏறிய சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரும், கிழக்கு ஆசியநாடுகளை முதன்மைப்படுத்தியது போன்று இந்தியாவை முதன்மைப்படுத்தியதாக இல்லை. அதாவது இந்தியாவின் பிராந்திய ரீதியிலான பலம், செல்வாக்கு என்பதைப் பொருட்டாகக் கொள்ளப்படவில்லை.

1971 ஜே.வி.பி.யின் முதல் கிளர்ச்சியின் போது இந்தியா இராணுவ ரீதியிலான உதவி அளிக்க முன் வந்ததைத் தொடர்ந்தே சிறிலங்கா அரசிற்கும்–இந்தியாவிற்கும் இடையிலான உறவில் ஒருவகை நெருக்கம் ஏற்பட்டது. ஆயினும் இந்தியா தொடர்பான ஐயப்பாடு சிறிலங்காவிற்குத் தொடர்ந்து இருக்கவே செய்தது.

ஆனால், இந்தியா–சிறிலங்க உடன்பாடும், இந்திய இராணுவத்திற்கும்–விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான மோதலையும் தொடர்ந்தே இந்தியாவுடனான உறவை வலுப்படுத்திக்கொள்ளச் சிறிலங்கா முனைந்தது. ஆயினும் இன்று ஆட்சியில் இருக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி–ஜே.வி.பி.கூட்டணியில் இருதரப்பினருமே இந்தியாவுடனான சமாதான உடன்பாட்டை ஆதரிக்கவில்லை இன்று கூட இவ் உடன்பாட்டை இவர்கள்– குறிப்பாக ஜே.வி.பி அங்கிகரிக்குமா என்பது கேள்விக்குரியதே.

அன்று ஜே.வி.பி. இந்தியாவிற்கு எதிராகப் பெரும்குரல் எழுப்பியதோடு, இந்தியப்பொருட்களை பகிஷ்கரித்தல், அழித்தல் போன்ற நடவடிக்கைகளிலும் இறங்கியது. இதன் விளைவாகப் பலர் கொலையுற வேண்டியதுமாகியது. அத்தோடு இந்திய இராணுவத்தை வெளியேற்றிவிட வேண்டும் எனக் கூக்குரல் இட்டதோடு இந்தியாவிற்கு எதரான வன்முறையிலும் இறங்கியது. இதேவேளை சிறிலங்கா சுதந்திரக்கட்சியோ இந்திய–சிறிலங்கா உடன்பாட்டின் அடிப்படையில் உருவான மாகாணசபைத் தேர்தலிலும் பங்கேற்காது பகிஸ்கரித்தது.

இந்தவகையில் இந்திய விரோத போக்கைக் கடைப்பிடித்தவர்கள் இன்று இந்தியாவைப் போற்றுவதும், வரவேற்பது என்பதும் ஏதோ விரும்பிச்செய்யும் செயல் அல்ல. ஒருவகையில் இந்தியா இதனை வலியுறுத்திப் பெற்றுக்கொண்டது. அல்லது சிங்கள ஆட்சியாளர்கள் நிர்ப்பந்தத்தில் இணைந்துகொண்டனர் எனலாம்.

அதாவது சிறிலங்கா ஆட்சியாளர்களுக்கு தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தை நசுக்குவதற்கு இந்தியாவின் உதவிகளைப் பெற்றுக்கொள்ளுதல் அவசியம் என்பதாகியது. இதற்கு இரு முக்கிய காரணங்கள் இருந்தன. ஒன்று சிறிலங்காவிற்குஆபத்து வேளைகளில் பலவகையிலும் உதவக்கூடிய வகையில் இந்தியா அருகில் இருந்தது. இரண்டாவது இந்தியாவைப் பகைத்துக்கொண்டு உலக வல்லரசுகளும் சரி, நாடுகளும் சரி சிறிலங்காவிற்கு உதவத் தயாராக இல்லை.

ஆனால் சிறிலங்கா ஆட்சியாளர்கள் வாய்ப்புக்கள் கிடைக்கப் பெற்றால் இந்தியாவின் நலன்கள் எதனையும் கவனத்திற் கொள்ளாது உலக வல்லரசுகள் எதனுடனும் உறவை வளர்த்துக் கொள்ளும் அளவிற்குச் சலுகைகளை வழங்கவும் தயாராகவே உள்ளனர். இதனை இந்தியா புரிந்துகொள்வதும் கடினமானதொன்றல்ல. ஏனெனில் இலங்கையில் இந்தியா பெற்றுள்ள வாய்ப்புக்கள், நலன்கள் என்பனவற்றின் பெரும்பாலானவை ஒருவகை அழுத்தத்தின் அடிப்படையிலேயே பெறப்பட்டவை என்பது அறியப்படாததொன்றல்ல.

ஆகையினால் இந்திய அரசு ஒன்றைப் புரிந்துகொள்ளுதல் வேண்டும். தமிழ் மக்களின் உரிமைப்போராட்டம் தோற்கடிக்கப்பட்டாலோ அன்றி அதற்கு எதிராகப் பெரும் வல்லரசுகள் நேரடியாக உதவ முன்வந்தாலோ சிறிலங்கா அரசு இந்திய நலன்களுக்கு மாறாகச் செயற்படத் தயங்கப்போவதில்லை. இந்தியா சிலவேளை இதனைத்தனது பலத்தின் மூலம் தடுத்து நிறுத்தலாம் என கொள்ளக்கூடும். ஆனால் அதற்கும் இலங்கையில் ஒரு வலுவான ஆதரவு சக்தி இருக்க வேண்டும் என்பதை இந்தியா நினைவிற் கொள்ளுதல் அவசியம்.

# நீதிபதி கொலைச் சந்தேக நபருடன் பொலிஸ் அதியுயர் அதிகாரிகளுக்கு தொடர்பு

### -மாதம் 10 லட்சம் லஞ்சம் பெற்றுவந்தனர்.

(கொழும்பு)

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய கொலைச சந்தேக நபருடன் பொலிஸ் அதியுயர் அதிகாரிகளுக்கு நெருங்கிய தொடர்பு இருந்துள்ளதாகவும் சந்தேக நபரிடமிருந்து இவர்கள் மாதாந்தம் 10 லட்சம் ரூபா லஞ்சமாகப் பெற்று வந்ததாகவும் விசார ணைகள் மூலம் தெரிய வந்துள்ளது. இந்தப் பட்டியலில் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர், பிரதி பொலிஸ்மா அதிபர் மற்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் ஆகியோருடன் கொழும்பிலும் கொழும்பிற்கு வெளியேயும் உள்ள பொலிஸ் நிலையங்களின் சில பொறுப்பதிகாரிகளும் இடம் பெற்றுள்ளார்கள். சந்தேக நபர் கைது செய்யப்படுவதற்கு முதல் நாள் குறிப்பிட்டவர்களில் உயர் மட்ட அதிகாரியொருவர் அவரைச் சந்தித்து உரையாடியுள்ளார். இருவருக்குமிடையே ஏற்கனவே இடம்பெற்ற தொலைபேசி உரையாடலொன்று கணினியில் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் அதனை அழிப்பதற்கு அந்த அதிகாரி முயற்சிகளை மேற் கொண்டிருந தார். மற்றுமொரு அதிகாரி சந்தேக நபரைக் கைது செய்தவுடன் குற்றப் புலனாய்வுத்துறையினர் அவரை விசாரிப்பதை தவிர்ப்பதற்காக உடனடியாகவே நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்தி விளக்க மறியல் உத்தரவை பெற்றுள் ளார். இந்த விபரங்கள் தற்போது வெளியாகியுள்ளது. மேலும் இதனைத் தவிர சில உயர் அதிகாரிகள் இந்த விசாரணையில் தலையிட்டுள்ளார்கள். இதற்கிடையில் இந்தக் கொலை தொடர்பான விசாரணை அறிக்கையையும், சம்பந தப்பட்ட பொலிஸ் அதிகாரிகள் தொடர்பான விபரங்களையும் உடனடியாக சமர்ப்பிக்குமாறு தேசிய பொலிஸ் ஆணைக்குழு பொலிஸ்மா அதிபரைக் கேட்டுளளது. (32)

# இ.தொ.கா தலைவர் தொண்டமானுக்கு அமைச்சர் பதவி வழங்க சந்திரிகா இணக்கம்

இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ் தலைவரான ஆறுமுகம் தொண்டமானுக்கு அமைச்சுப் பதவி ஒன்றை வழங்கவும் அதன் பிரதியமைச்சர் பதவிக்கு பைஸர் முஸ் தபாவை நியமிக்கவும் சனாதிபதி சந்திரிகா இணங்கியிருப்பதாக சனாதிபதி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சந்திரிகாவுக்கும் தொண்டமானுக்கு இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் பலனாக இந்த இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் இவருக்கு வழங்கப்படவிருக்கும் அமைச்சுப் பொறுப்பு எது என்பது தெரியாத போதும் தொண்டமான் நகர அபிவிருத்தி அமைச்சுப் பகுதியை கோரியிருப்பதாகத் தெரியவருகினறது.

# இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு ஆணையாளர்கள் நியமனம் தாமதம்

இலஞ்ச ஊழல்களுக்கு எதிரான ஆணைக்குழுவுக்கு புதிய ஆணையாளர்களாக பரிந்துரைக்கப்பட்டுள்ளவர்களுக்கான சனாதிபதியின் அனுமதி இன்னும் இரண்டு வாரங்களின் பின்னரே கிடைக்கும் என தெரிவிக்கப்பட்டுளளது. குறிப்பிட்ட உறுப்பினர்கள் மீது பொதுமக்களின் முறைப்பாடுகள் வரவேற்கப்படுவதன் காரணமாக இன்னும் அந்த பெயர்களுக்கான அனுமதி கோரல் கோவை சனாதிபதிக்கு அனுப்பப்படவில்லை. அண்மையில் கூடிய அரசியலமைப்பு சபை இந்த ஆணைக குழுவுக்கு புதிய உறுப்பினர்களாக முன்னாள் நீதியரசர் அமீர் இஸ்மாயில், பி.எதிரிசூரிய மற்றும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் டி ஈ ஆனந்தராஜா ஆகியோரின் பெயர்கள் பரிந்துரைத்தது

இந்தப் பெயர்கள் சனாதிபதியின் அனுமதிக்காக அனுப்பப்படவுள்ள நிலையிலேயே புதிய உறுப்பினர்கள் தொடர்பாக பொது மக்களின் முறைப்பாடுகள் கோரப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் தற்சமயம் பல முறைப்பாடுகள் அரசியலமைப்பு சபைக்கு கிடைக்கப்பெற்றுள்ளன. இதில் மோசமான குற்றச்சாட்டுகளும் உள்ளடங்கியுள்ளன. இந்த நிலையில் மேலும் முறைப்பாடுகள் இருப்பின் அதனை செயலர் அரசியலமைப்பு சபை முன்டாஸ் மஹால், காலி வீதி கொழும்பு 3 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அரசியலமைப்பு சபை கேட்டுள்ளது (32)

# உறுதியற்ற பொருளாதார முகாமைத்துவமே பொருட்கள் விலை அதிகரிப்புக்கு காரணம்

### –முன்னாள் அமைச்சர் ஜீ.எல் பீரிஸ்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தின் ஸ்திர மற்ற பொருளாதார முகாமைத்துவமே பொருட்களின் விலை அதிகரிப்பதற்குப் பிரதான காரணம் என போராசிரியர் ஜீ.எல் பீரிஸ் கூறியுள்ளார்.

உலக சந்தையில் எரி பொருட்களின் விலை குறைந்த போதிலும் அதற்கேற்ப வகையில் பொருட்களின் விலையைக் குறைக்க வில்லையெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதே வேளை பொருட்களின் விலை அதிகரிப்பிற்குக் காரணம் உலக சந்தையில் எரிபொருளின் விலை அதிகரிப்பட்டமையே எனக் கூறப்பட்டது.

ஆனால் உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை 22 சதவீதத்தால் தற்போது குறைந்துள்ளது. ஆனால் பொருட்களின் விலை குறைந்த பாடில்லை என்றார் அவர்.

# மேல்கொத்மலை நீர்மின்திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும்

### –அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த தெரிவிப்பு

மேல் கொத்மலை நீர்மின் திட்டம் உரிய முறையில் முன்னெடுக்கப்படும் என எரிசக்தி மின்சாரத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

ஜப்பானிய ஒத்துழைப்புக்கான சர்வதேச வங்கி எதிர் வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படுமா இல்லையா? என்பது தொடர்பில் அமைச்சர் சுசில் பிரேமஜெயந்திடம் கேள்வி எழுப்பியிருந்த நிலையிலேயே அமைச்சர் இந்தப் பதிலை அளித்துள்ளார்.2002 ஆண்டு மார்ச் மாதம் தம்முடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்துக்கு மாறாக குறிப்பிட்ட திட்டம் செயற்படுத்தப்படுமென்ற அடிப்படையிலேயே ஜப்பானிய வங்கி அமைச்சரிடம் கேள்வி எழுப்பியிருந்தது.

இதற்கு பதிலளித்துள்ள அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னரே இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டும் எனினும் பல்வேறு சுற்றாடல் பிரச்சினை காரணமாக இது தாமதப்படுத்தப்பட்டு வந்தது. இந்த நிலையில் இதனை ஆராய அமைச்சரவை உபகுழு ஒன்று அமைக்கப்பட்டு அதில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் இன்னும் இரண்டு வாரங்களுக்குள் இந்தத் திட்டம் குறித்து இறுதித்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு அது நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அவர் கூறினார். ஆனால் மேல் கொத்மலை நீர் மின் திட்டத்திற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கடும் எதிர்ப்புத் தெரிவித்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (32)

# ஜே.வி.பி குறித்த அச்சம் காரணமாகவே

# ஐ.தே.க வுடன் பேச சந்திரிகா தயக்கம்

## ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு

அரசுக்குள் சமாதான முயற்சிகள் தொடர்பில் இன்று முன்னுக்குப் பின் முரண்பாடு விரிவடைந்து வருகின்றது. இது நாட்டைப் படிப்படியாக போர் முனைக்கு இட்டுச் செல்வதற்கான அச்சுறுத்தலை விடுக்கிறது என்று சிறிலங்காவின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது. இக்கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நடைபெற்ற கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பாக கட்சி இந்த அறிக்கையை விடுத்துள்ளது. அரசியல் சுயலாபம் தேடும் முயற்சிகளை கைவிட்டுவிட்டு உடனடியாக விடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும் என இதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமது கட்சியுடன் ஆரம்பத்தில் பேசிவந்த சனாதிபதி சந்திரிகா பின்னர் ஜே.வி.பியின் அச்சுறுத்தல் காரணமாக அதை கைவிட்டுவிட்டார் என்றும், இப்போதும் காலம் கடந்து விடவில்லை, இதயசுத்தியுடன் சனாதிபதி முன்வந்தால் பேச்சுவார்த்தைக்கு ஒத்துழைக்க தமது கட்சி தயாராகவே இருக்கின்றது என்றும் மேலும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசு உடனடியாக அதன் நிலைப்பாட்டை வெளிப்படையாக அறிவிக்க வேண்டும் என அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. நிலைமை மோசமடைய விடக்கூடாது. தேசம் மீண்டும் அழிவை நோக்கிச் செல்ல இடமளிக்க முடியாது. நாட்டின் மீதும், மக்கள் மீதும் பற்றுதல் இருக்குமானால் சனாதிபதி உடனடியாக உறுதியான முடிவை எடுத்துப் பேரழிவிலிருந்து நாட்டைக் காப்பாற்ற முன்வர வேண்டும். அப்போது கட்டாயமாக எதிர்க் கட்சியின் ஆதரவை முழுமையாகப் பெற்றுக் கொடுக்கத் தயாராகவே இருக்கின்றோம் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

# வல்லைப்பாலப்பகுதியில் படையினர் புதிய பதுங்கு குழிகள் அமைப்பு

யாழ்.பருத்தித்துறை வீதியின் வல்லைப்பாலப் பகுதியினுள் கொட்டு மழையினுள்ளும் இராணுவ காவலரண்கள் மற்றும் பதுங்கு குழிகளை படையினர் அமைத்து வருகின்றனர். ஏற்கனவே இப்பாலப் பகுதியினுள் இருந்த இராணுவ காவலரண்கள் மற்றும் பதுங்கு குழிகளிற்கு மேலதிகமாகவே இது அமைக்கப்பட்டுள்ளது. இதே வேளை இப்பாலப்பகுதியினில் மேற்கொள்ளப்பட்டு வந்த நிர்மாணப் பணிகள் கடந்த சிலவாரங்களாக தடைப்பட்டுள்ளது. தொடர்ச்சியான மழையினாலும் பாலத்தினூடு வெள்ளம் பாய்ந்தோடுவதனாலுமே இப்பணிகள் தடைப்பட்டுள்ளது.

இதனிடையே பிரதான பாலப் பகுதியினில் மேற்கொள்ளப்படும் திருத்த வேலைகளை கருத்தில் கொண்டு அப்பகுதிகளிலுள்ள இராணுவ காவலரண்களை அகற்றவும் பின்நகர்த்திக்கொள்ளவும் யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி அரச அதிபரிற்கு உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (27)

### ஜே.வி.பி...

அனுப்பிய ஜே.வி. பி யின் செயலர் டில்வின் சில்வா பாராளுமன்ற உறுப்பினராக கூட அங்கம் வகிக்கவில்லை என்பதையும் வெளிநாட்டமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏற்கனவே ஜே.வி.பி நோர்வே ஏற்பாட்டாளர்கள்,தொடர்பில் அனுப்பியிருந்த கடிதத்தில் இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வில் நோர்வே உரிய முறையில் செயற்படவில்லை. எனவே அந்த நாட்டின் மீது தமது அரசாங்கம் முழுமையாக நம்பிக்கை இழந்துள்ளதாகவும் தெரிவித்திருந்தது.

குறிப்பாக நோர்வேயில் அமைந்துள்ள தமிழ்ச் சங்கம் என்ற தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னணி அமைப்புக்கான பிரச்சார கூட்டத்தில் நோர்வே பிரதமர் ஜெல் பொன்டவிக் உள்துறை அமைச்சர் சொல்பேக், இலங்கையின் சமாதான ஏற்பாட்டாளர் எரிக்சூல்ஹெய்ம் ஆகியோர் பங்கேற்றுள்ளனர். இந்த நிலையில் நோர்வே தரப்பினரை இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் ஏற்பாட்டாளர் நிலை வகிக்குமாறு இலங்கை அரசாங்கம் கேட்டுக்கொண்டபோதும், அந்த நாடு மத்தியஸ்தர் நிலைக்கு சென்றுள்ளதாக ஜே.வி.பி யின் செயலர் குற்றம் சுமத்தியிருந்தார். அத்துடன் அந்த நாடு தமிழீழம் என்ற தனிநாட்டுக்கு உதவி வழங்குவதாகவும் அவர் தெரிவித்திருந்தார். - நோர்வேயில், விடுதலைப் புலிகளுக்கு நிதி திரட்ட அனுமதியளிக்கப்பட்டுள்ளது. கடற்புலிகளுக்கு நோர்வேயில் பயிற்சியளிக்கப்பட்டு வருகின்றது எனவும் அவர் குற்றம் சாட்டினார். (32)

# குரே மீண்டும் ஐ.தே.க வில்

சிரிசேன குரே மீண்டும் ஐக்கிய தேசியகட்சியில் இணைந்துக்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. இது தொடர்பில் அண்மையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது. கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் இந்த நகர்வுக்கு ஆதரவு தெரிவித்துள்ளதாக கட்சித்தரப்புகள் தெரிவித்துள்ளன.

சிறிசேன குரே முன்னர் சனாதிபதி ஆர்.பிரேமதாஸவின் காலப் பகுதியில் முக்கியமானவராக செயற்பட்டு வந்த அதேநேரம் பின்னர் கட்சியில் இருந்து விலகி புதிய கட்சி ஒன்றை நிறுவி செயற்பட்டார். (32)

# மகிந்த ராஜபக்ஷவுடன் திருமாவளவன் சந்திப்பு

இலங்கையின் பாராளுமன்றத்திற்கு நேற்று முன்தினம் தமிழ் நாட்டின் விடுதலை சிறுத்தை அணியின் தலைவர் திருமாவளவன் சிறிலங்காவின் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவையும் சந்தித்து உரையாடினார். இந்தச் சந்திப்பு சுமார் 20 நிமிட நேரம் பாராளுமன்றத்தில் உள்ள பிரதமரின் அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போது தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனையின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்தி இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும் என திருமாவளவன் தெரிவித்தார். (32)

# பாரிய குற்றங்கள் புரிந்த 100 பேர் தொடர்ந்து பொலிஸ் திணைக்களத்தில்

## பொலிஸ் பரிசோதகர் சங்கம் குற்றச்சாட்டு

மனித படுகொலைகள் இலஞ்ச ஊழல்கள் பாலியல் குற்றம் புரிந்த நூற்றுக்கு மேற்பட்டோர் பொலிஸ் திணைக்களத்தில் இருப்பதாக பொலிஸ் பரிசோதகர் சங்கம் தெரிவித்துள்ளதுடன் இதுவரை இவர்களை பொலிஸ் திணைக் களத்தில் இருந்து நீக்குவதற்கு எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவித்துள்ளது. இவர்கள் உயர் பதவிகளில் இருக்கின்றனர். அநேகமானவர்கள் இலஞ்ச ஊழல்களிலும், மனைவியின் சொத்துக்களை துப்பாக்கியை காட்டி பயமுறுத்தி தனது பெயருக்கு உயில் எழுதிக் கொண்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளனர். ஆகவே இவர்களை உடனடியாக வேலை நிறுத்தம் செய்ய வேண்டும் எனவும் இவர்கள் இருக்கும் வரை பொலிஸ திணைக்களத்தில் சட்டம் ஒழுங்குகளை நிறைவேற்றமுடியாதென பொலிஸ் பரிசோதகர் சங்கம் தெரிவித்துள்ளது.

### சமாதான...

சிறிலங்காவின் இராணுவம் ஒரு பயணத்துக்கான தேடல் என்ற அவரது நூல் அண்மையில் வெளிவந்திருந்தது. சிறிலங்காவின் விமானப்படை எம்ஐ-35 ரக யுத்த உலங்குவானூர்திகள் பத்தையும், மேலும் போக்குவரத்து யுத்த விமானங்கள் பத்தையும் வாங்கியுள்ளது. தாக்குதல் உலங்குவானூர்திகளை 24ஆக அதிகரித்துக்கொண்டுள்ளன என்று அதில் தெரிக்கப்பட்டுள்ளது.

### கட்சியை...

பண்டாரநாயக்க மூன்றாவது முறையாகவும் பதவிக்கு வர முயற்சிக்கிறார். இது அரசியலமைபபுக்கு முரணானது. இதற்கு ஜே.வி.பி உடன்படுவதன் மூலம் அந்தக் கட்சி அரசியலமைப்புக்கு மாறாகவே செயற்படுகிறது. சந்திரிகா மீண்டும் யுத்தம் ஒன்றுக்கு நாட்டை கொண்டு செல்கிறார். அரசாங்கத்துக்கு நாம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான காலக்கெடு முடிவடைந்து விட்டது இனி நாம் போராட்டத்தின் மூலம் அரசாங்கத்தை வெளியேற்ற தாம் முனைப்பை மேற்கொள்ளப் போகின்றோம் என அவர் எச்சரித்தார்.

தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் யுத்தநிறுத்த ஒப்பந்தம் குறித்து குற்றம் சுமத்தி ஆட்சிக்கு வந்த கூட்டமைப்பு அரசு இன்று பல்வேறு சிரமங்களுக்கு உட்பட்டுள்ளது. அன்று மணிராசகுள முகாமை அகற்றுவதாக தெரிவித்தனர். ஆனால் மணிராசகுள முகாம் தொடர்ந்தும் இருக்கின்றது. கொடியேற்றி மாவீரர் தினத்தை அனுஷ்டித்த புலிகளுக்கு இடமளிக்கப்பட்டது. எங்களைப் போன்றே அவர்களும் வாய்ப்பளித்துள்ளனர். அதனால் என்ன ஏற்பட்டுள்ளது? இன்று பேச்சுவார்த்தை மேசையில் அமர்ந்து பேச முடியாமல் இருக்கின்றது. அன்று நாங்கள் முழு சர்வதேசத்தினதும் ஆதரவை இலங்கைக்கு கொண்டு வந்தோம். இன்று சர்வதேச சமூகம் பேச்சுவார்த்தைக்கு செல்லுமாறு இலங்கைக்கு அறிவுறுத்துகின்றது. இச் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு மக்கள் விடுதலை முன்னணிக்கு அவசியம் இல்லை. அரசாங்கத்திற்கு இதில் தேவை இருக்கின்றதா? என்பது குறித்து நாம் கேள்வி கேட்கவேண்டும். இவ் யுத்தமானது தீர்க்கக்கூடிய யுத்தமாக இருந்தது. தற்போது யுத்த நிறுத்த ஒப்பந்தமானது இழுபறியில் செல்கின்றது. இவ்வாறு இதனை இழுத்துச்செல்ல இயலாது முன்னோக்கிச் செல்லாது விட்டால் சில நேரங்களில் மீண்டும் யுத்தத்திற்கு செல்ல வேண்டி நேரிடலாம் என நேசநாடுகள் எமக்குத் தெரிவிக்கின்றன என தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி அதிகாரத்திலிருந்து கவிழ்க்கப்பட்டதற்கான முக்கிய காரணம் நிறைவேற்றப்பட முடியாத பிரபல்யமான வாக்குறுதிகளை தெரிவிக்காது இருந்தமையே இதனைவிட மற்றுமொரு காரணம் ஐ.ம.சு முன்னணி மக்களுக்கு பல உறுதிமொழிகளை வழங்கியிருந்தமை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதேவேளை நேற்றைய ஐக்கிய தேசியக் கட்சியின் சம்மேளனக் கூட்டத்தில் 7 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை கட்சியின் வேட்பாளராக நிறுத்துவது, அரசியலமைப்பை சட்டவிரோதமாக மாற்றுவதற்காக எதிராக செயற்படும் முனைப்புகளுக்கு நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் கட்சியின் நிறைவேற்று சபைக்கு பாரப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் சனாதிபதித் தேர்தல் உரிய திகதியில் நடைபெறாவிட்டால் அதற்கெதிரான தீர்மானங்களையும் எடுக்க கட்சியின் நிறைவேற்று சபைக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவை அமைக்கக்கோருவது, உட்பட்ட தீர்மானங்களையே நேற்று ஐக்கிய தேசிய கட்சியின் சம்மேளனம் நிறைவேற்றியது. (32)

### திறமை...

ஒரு பண்டைய பாரம்பரிய விலை மதிப்பற்ற மனித அனுபவங்களால் உருவாக்கப்பட்ட எல்லோராலும் அளப்பெரும் பொக்கிஷமாகப் போற்றப் படுகின்றதுமான தமிழ்க்கலாச்சாரம் மிகப்பெரிய அபாயத்தை எதிர்நோக்குகின்றது.

பாரம்பரிய கலாச்சாரங்கள் அடிக்கடி தாக்கப்படுவது உண்மையாகிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் தமிழர்கள் தமது விடுதலைக்காக போராடிக்கொண்டிருக்கும் ஒரு மாபெரும் வீரத் திருமகனை உருவாக்கியுள்ளார்கள்.

வேலுப்பிள்ளை பிரபாகரன் அரை நூற்றாண்டு வயதை கார்த்திகை மாதம் 26ஆம் திகதி 2004ஆம் ஆண்டு பூர்த்தியாக்கும் இத்தருணத்தில் அவர் தமிழ் மக்களுக்கு ஆற்றிய அளப் பெரும் சாதனைகள் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய தொன்றாகும்.

தமது மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறை நடவடிக்கைகளை உணர்ந்து காந்தீயவழி அவர்களை காப்பாற்றமுடியாதென முடிவுசெய்தார். அதனால் அவர் தமிழரின் விடுதலைக்காக தனது முதற் கட்ட நடவடிக்கையாக ஆயுதம் ஏந்தினார்.

அவர் மிகுந்த பலம்மிக்க எதிரிகளைத் தக்க தருணத்தில் வெற்றி கொள்ளவும், விடுதலை இலக்கை அடைவதற்கும் ஆயுதங்களைப் பிரயோகிப்பதில் தகுந்த தேர்ச்சி பெற்றிருந்தார்.

சிறுபடை அமைப்பு, கட்டுப்பாடுடன் கூடிய ஒழுங்கமைப்பு, சொந்த வாழ்க்கை அர்ப்பணிப்பு, நாசகாரப் படை எதிர் கொள்ளல், அபாயகரமான கட்டங்களிலும் நிலைத்து நிற்கும் வல்லமை. அத்துடன் தன் மக்களை நிலைப்படுத்தியமை, சிறுபான்மை இனத்தவரின் உரிமைக்கும் கௌரவத்திற்கும் குரல் கொடுத்தமை இது போன்று இளம் பிராயத்தில் இருந்தே போராடத் தொடங்கிய வேறு தலைவர்கள் எவராவது கடந்த நூற்றாண்டில் இருக்கிறார்களா?

இறுதியான துரதிஷ்டமான கால கட்டத்தை கடந்த வெற்றிப் பாதையில் முன்னேறும் போது தனது மக்கள் சுதந்திரமான, தனித்துவமான தற்பாதுகாப்புடன் கூடிய தத்தமது நிர்வாக இயந்திரங்களை நிர்வகிக்கவும் தமது சொந்த இடங்களில் சமத்துவமாக வசிப்பதற்காக பிரபாகரன் தனது இராணுவ ரீதியான நிலைப்பாட்டிலிருந்து சுலபமற்றதும் இராஜதந்திரமான போர் நிறுத்தத்திற்கு உடன்பட்டார். போர் நிறுத்தமானது அதனது நான்காவது வருட தொடக்கத்தை அண்மித்துக் கொண்டிருக்கும் வேளையில் பிரபாகரன் தான் ஒரு திறமை மிக்க படைவீரர் மட்டுமன்றி தேசிய சிற்பி என்பதையும் நிரூபித்தார்.

சர்வதேச ஆதரவும் சித்திரை மாதம் 2004 ஆம் ஆண்டு தேர்தல் பின்னணியில் தமிழ் மக்களின் ஏகோபித்த பக்க பலமும் பிரபாகரன் அவர்களை அரசியல் ரீதியான செயற்பாட்டின் மூலம் தமிழ் மக்களின் தனித்துவத்தை வடக்கு கிழக்கு இலங்கையில் ஒரு தேசிய அமைப்புடன் கூடிய சுயாட்சியை உருவாக்க வழி வகுத்தது. இதன் மூலம் சமாதானமும் சுபீட்சமும் இலங்கைத்தீவில் உருவாகி விலைமதிப்பற்ற தமிழர்களின் கலாச்சாரம் பேணப்பட்டு மனித மேம்பாட்டிற்கு வழிவகுக்கப்படும்.

வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களது பல்வேறு சாதனைகள் எதிர்காலத்தில் அவரின் மிகப் பெரிய சாதனையொன்றின் எதிர் பார்ப்பிற்கு அற்புதமான தமிழ் மக்களையும் அவர்களது அயலவர்களையும் உள்ளாக்கும் என வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். (சோ)

வடக்கு-கிழக்கு மனித உரிமைகள் செயலகம் ஐக்கிய நாடுகள் சபையாலும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்களாலும் வெளியிடப்பட்ட சகல அம்சங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. (சி-11002)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.